
ஆரம்பம் 1969 பெப்ரவரி

அறிவோம்.. அறிவிப்போம்...

# தொண்டன்

சமய - சமூக - இலக்கிய வெளியீடு

ஜனவரி - பெப்ரவரி - மார்ச் - 2026



100/=

2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN : 2012-6352 Reg.No.187317

# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...



ஆரம்பம் - 1969 பெப்ரவரி

மலர் - 57 ஜனவரி - பெப்ரவரி - மார்ச் 2026 இதழ் - 01

■ **ஆசிரியர் :**
அருட்தந்தை.
கிளமென்ற் V. அன்னதாஸ்

■ **துணையாசிரியர் :**
திரு. பெஸ்லியோ வாஸ்

■ **நூல் வடிவமைப்பு :**
திருமதி. சுபாஜெனி சங்கர்

**வெளியீடு**

**சமூகத் தொடர்பு நிலையம்,**
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.

**SOCIAL COMMUNICATIONS CENTRE**

P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com

விலை : 100/=
ஆண்டுச் சந்தா : 1700/=
(தபாற் செலவு உட்பட)


## அன்புடன் உங்களோடு ...

இன்றைய உலகளாவிய அரசியலில் போரும், அதற்கு பின்னால் உள் நுழையும் சமாதானமும் அமைதியும், இயல்புதான். ஆனால் போரின் கொடுமையும் வலியும், அதன் இழப்பிலிருந்து மனித குலம் மீண்டெழுவது அவ்வளவு இலகுவானதல்ல. யுத்தத்தை ஆரம்பிப்பது இலகு, ஆனால் ஒரு கட்டத்தில் அதனை யாராலும் நிறுத்த முடியாது. இது இன்று மத்திய கிழக்கில் நடக்கும் போருக்கும் விதிவிலக்கல்ல. இந்த யுத்தம் முடிவுக்கு வர வேண்டும் என்று திருத்தந்தை அழுத்திச் சொல்கிறார்.

இந்த யுத்தம் உலகின் இயல்பு வாழ்க்கையை பெரிதும் பாதித்துள்ளது. அமெரிக்காவுக்கு சவாலாக தோன்றிய ஈரான் துணிந்து போராடுகின்றது. அமெரிக்காவுக்கு சவாலாக இருந்த பில்லேடன், சதாம் ஹீசைன், கேணல் கடாபி கொல்லப்பட்டதால் அந்நாடுகள் அமெரிக்காவுக்கு அடிபணிந்தன. அந்த வரிசையில் தான் ஈரானின் அணுவிஞ்ஞானிகளும், இராணுவ தளபதிகளும், அயத்துல்லா அலி கோமேனியும் கொல்லப்பட்டார்கள்.

ஈரானில் ஒன்பதரைக்கோடி மக்களில் எட்டுக்கோடி பாரசீகர்கள் ஈரானிய தேசியவாதத்தில் கீழ் அணிதிரண்டிருக்கின்றார்கள். இந்த யுத்தம் தொடர்ந்தால் ஹர்மோஸ் வாயில் மூடப்பட்டால் யுத்தம் தொடரும். எங்கும் அவல ஓலம் ஒலிக்கும், வறுமை தாண்டவமாடும். 'நீயா நானா' என்ற போட்டியில் விளைவுகளை நாம் சந்திக்க நேரிடும். இருண்ட சூழலுக்கு உலக நாடுகள் அனைத்தும் தள்ளப்படும்.

இப்படி இருக்க நமது நாட்டில் குறிப்பாக வடக்கு கிழக்கில் நடக்கும் கொடூரகொலை, கொள்ளைச் சம்பவங்களும் பெரும் அதிர்ச்சியைத் தருகின்றது. தமிழ் மக்கள் இவ்வளவு கொடூரமானவர்களா? இவர்களின் உடலில் ஓடும் இரத்தம் அந்த தமிழ் இரத்தமா? என்று சிந்திக்க வைக்கின்றது. அரசியலிலே பாராளுமன்றத்திற்கு தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டவர்கள் உச்சரிக்கும் இன, மத, துவேஷ, பண்பாடற்ற வார்த்தைகள் தமிழினத்தையே பிளவுபடுத்தும் பிரதேச வாதங்கள் பல குழப்பங்களை உருவாக்கியுள்ளன.

இந்த குழப்பமான சூழ்நிலையில் கத்தோலிக்கர்களாகிய நாம் தவக்காலத்தில் நகர்ந்து கொண்டிருக்கின்றோம். எமது செபம், தவம், ஈகை செயற்பாடுகளின் வழியாக இறைவேண்டல் செய்வோம். இந்த யுத்தம் முடிவுற வேண்டும். வாழ்க்கை காலம் குறுகியது. அதனை மகிழ்ச்சியாக அனுபவிக்க விடாமல் தடுக்கும் சக்திகளை இறைவன் தகர்த்தெறிந்து உயிர்ப்பும் உயிரும் நானே என்றும் கூறும் வல்லமையான இறைவன் உலகத்திற்கு அமைதியை தரவேண்டி மன்றாடுவோம். மனித உள்ளங்களில் எழும் தீய எண்ணங்களை தகர்த்து மனிதநேய எண்ணங்கள் துளிர்க்க மன்றாடுவோம்.

**உங்கள் அனைவருக்கும் உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்.**

- ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## உள்ளே...

1. யார் இந்த வானதூதர்கள்? .................................... 02

2. உலகச் செய்திகள் .................................... 05

3. சிம்மாசனம் .................................... 06

4. மாணவர் பக்கம் .................................... 09

5. கடுகுக்கதை .................................... 11

6. இலக்கிய மஞ்சரி .................................... 12

7. கட்டிளமை .................................... 14

8. அரசியல் .................................... 16

9. பிள்ளைகள் மனங்களில் .................................... 18

10. மறைமாவட்டச் செய்திகள் .................................... 19

11. என் குமரன் .................................... 21

12. பார்வைகள் பலவிதம் .................................... 24

13. அருட்தந்தை யோசப் இக்னேசியஸ் .................................... 25

14. வினாவிடைப் போட்டி .................................... 27

15. போட்டி முடிவுகள் .................................... 28

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் இந்த வானதூதர்கள்?

தொடர் - 4

அருட்தந்தை கிளமென்ற் V. அன்னதாஸ்

வானதூதர் என்பது இயல்பு கிடையாது, மாறாக செய்யக்கூடிய பணி. வானதூதர்கள் கடவுளின் திருமுன் நின்று எப்போதும் அவரைப் புகழ்ந்துகொண்டிருப்பவர்கள் அவர்கள் கடவுள் விடுக்கும் கட்டளையை நிறைவேற்றக் கூடியவர்கள் தீமைக்கெதிரான போராட்டத்தில் நம்மோடு உடன் இருப்பவர்கள்" என்கிறார் தூய அகுஸ்தினார்.

வானதூதர்களை அவர்கள் செய்யக் கூடிய பணிகளை வைத்து முக்கியமான பணிகளைச் செய்பவர்களை வானதூதர்கள் என்றும், மிக முக்கியமான பணிகளைச் செய்பவர்களை அதிதூதர்கள் என்றும் தூய கிரகோரியார் குறிப்பிடுவார்.

மிக முக்கியமான பணிகளைச் செய்ய அதிதூதர்கள் எழுவர் இருப்பதாக திருஅவையால் அங்கீகரிக்கப்படாத ஏனோக் நூலில் நாம் காணலாம். மிக்கேல், கபிரியேல், ரபேல், உரியேல், சீத்தியேல், ஜுகுதியேல், பரசியேல் என்பவர்களே அவர்கள். இந்த எழுவரில் மிக்கேல் கபிரியேல் இரபேல் ஆகியோரின் பெருவிழாவை திருஅவையானது செப்டம்பர் 29 அன்று நினைவுகூறுகின்றது.

**இஸ்லாமும் வானதூதரின் நம்பிக்கையும்:**

இஸ்லாமியரின் நம்பிக்கைகளின் மிக முக்கிய அம்சமாக வானதூதர்களின் (மலக்குகள்) நம்பிக்கை விளங்குகின்றது. இந்த வானதூதர்கள் யாரென்றால் இவர்கள் அல்லா ஹவால் ஒளியால் படைக்கப்பட்டவர்கள். பாவம் செய்யாதவர்கள். இறைவனுடைய கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழ்பவர்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறப்புப்பணி உண்டு. குறிப்பாக ஜிப்ரில் எனும் வானதூதர் இறைச்செய்தியை நபிகளுக்கு கொண்டு சேர்ப்பவர்களாகவும் மற்றும் மிகாஈல் மழையைப் பொழிய வைப்பராகவும் மற்றும் இஸ்ராஈல் என்ற வானதூதர் உயிரைக் காப்பவராகவும் இவர்களது பணியைச் செய்கின்றார்கள். வானதூதர்களுக்கு மனிதரைப்போல் பசி, தாகம், உறக்கம், இல்லை. ஆண், பெண் என்ற வேறுபாடும் இல்லை என்றும் இவர்கள் கடவுளுடைய கட்டளைகளை உடனுக்குடன் நிறைவேற்றுபவர்களாக இஸ்லாமியர் நம்புகின்றார்கள். வானதூதர்களை நம்பாதவர்கள் முழுமையான இஸ்லாமியர் இல்லை என்பது இஸ்லாமிய கோட்பாடாகும்.

மீண்டும் கத்தோலிக்க நம்பிக்கைக்குள் நுழைவோம்,

வான தூதருக்கு ஏன் விழா எடுக்க வேண்டும்?

திருஅவையானது அதிதூதர்களான மிக்கேல், கபிரியேல் மற்றும் இரபாயேல் இவர்களின் திருவிழாவைக் கொண்டாட நம்மை அழைத்து, அதற்கேற்ற நாளாக செப்டம்பர் மாதம் 29-ம் திகதியினை நிர்ணயித்துள்ளது. பல காலமாகத் திருஅவையின் வழிபாடு முறைகளில் அதிதூதர்களின் திருவிழாவைக் கொண்டாடுவது வழக்கமாக இருந்து வருகின்றது. திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அதிதூதர்களைப் பற்றிக் கூறும்போது, "வானதூதர்கள் கடவுளுக்காகத் தனிப்பட்ட விதத்தில் படைக்கப்பட்டவர்கள்" என்று கூறுகின்றார். திருவிவிலியமும் திருஅவையின் பாரம்பரியமும் அதிதூதர்களைப் பற்றிய இரண்டு சிறப்பு அம்சங்களை நமக்கு எடுத்துரைக்கின்றன. 1) வானதூதர்கள் கடவுளின் முன்பாக எப்போதும் இருப்பதற்காகவும் கடவுளுக்காக இருப்பதற்காகப் படைக்கப்பட்டவர்கள் என்றும் கூறப்படுகிறது. 2) அதிதூதர்களாக அறியப்படும் மிக்கேல், கபிரியேல், இரபாயேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற மூவரின் பெயர்களும், "யேல்" என்று முடிவதன் காரணம் மிக முக்கியமானது. "யேல்" என்றால் எபிரேயம் மற்றும் கிரேக்க மொழிகளில் "கடவுள்" என்று பொருள்படும். அவர்களின் பெயர்களிலே கடவுள் பொறிக்கப்பட்டுள்ளார். அவர்களின் பெயர்களே அவர்கள் கடவுளுக்கான வர்கள் என்பதை நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. வானதூதர்கள் கடவுளின் தூதர்கள். அவர்கள் கடவுளின் சொற்படி செயல்படுபவர்கள். கத்தோலிக்கத் திருஅவையின் மறைக் கல்வி (Catechism of the Catholic Church) எண்: 350 "வானதூதர்கள் கடவுளை இடைவிடாமல் துதிப்ப தற்காகவும், கடவுளின் திட்டத்தை செயல்படுத்த வும் கடவுளால் படைக்கப்பட்டவர்கள்" என்று விளக்குகின்றது. வானதூதர்கள் கடவுளால் படைக் கப்பட்ட நம்முடைய நலன்களுக்காகவும் செயல் படுபவர்கள் ஆவர். விண்ணகத்தை நோக்கிய நம்முடைய திருப்பயணத்திற்கு உறுதுணை யாயிருப்பவர்கள். இவர்கள் நம்முடைய சாதாரண கண்களுக்குப் புலப்படாதவர்கள். இதனைதான் நாம் நம்முடைய நம்பிக்கை அறிக்கையில், "காண்பவை, காணாதவை யாவும் படைத்த எல்லாம் வல்ல இறைவனை நம்புகின்றேன்" என்று அறிக்கையிடுகின்றோம்.

"பெரும்பாலும் வானதூதர்கள் மனிதர்களின் உருவில் தான் வருகின்றார்கள். தங்களது பணி நிறைவடைந்ததும் வந்த இடம் தெரியாமல் சென்றுவிடுகின்றார்கள்" என்பதாகும். மேலும் வானதூதர்களைப் பற்றி நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்களின் வேகத்தைக் குறிக்கும் விதமாக இறக்கைகளும், அவர்களின் புனிதம் மற்றும் ஞானத்தைக் குறிக்கும் விதமாக அவர்களின் தலைக்கு மேல் ஒளி வட்டங்களும், அவர்களின் அழகு மற்றும் ஆன்மீக நல்லிணக்கத்தைக் குறிக்கும் விதமாக இசைக் கருவிகளும், அவர்களின் தீங்கின்மை மற்றும் கள்ளங்கபடற்றத்தன்மையைக் குறிக்கும் விதமாக அவர்கள் குழந்தைகளைப் போன்றவர்களாகவும் உருவம் கொடுக்கப்பட்ட உருவில்லாத நிலையில் இருப்பவர்கள் தான் வானதூதர்கள்.

வானதூதர்கள் ஏராளமானவர்கள் இருந்தாலும் விவிலியத்தில் மூன்று வானதூதர்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்களை நினைவுகூரும் விதமாக திருஅவையானது திருவிழா எடுத்து மிகவும் கொண்டாடி மகிழ்கின்றது.

**அதிதூதர்கள் திருவிழா வரலாறு:**

கி.பி 5-ம் நூற்றாண்டின் தொடக்கம் முதலே அதிதூதரான மிக்கேலின் விழா செப்டம்பர் மாதம் 29-ம் நாள் நினைவுகூரப்பட்டு விழாவாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. காலங்கள் கடந்தோட அதிதூதர் மிக்கேலுக்காக சிற்றால யங்கள் மற்றும் பேராலயங்கள் நேர்ந்தளிக்கப்பட்டு வந்துள்ளன. 1969-ம் ஆண்டு அப்போதைய திருத்தந்தை 6-ம் சின்னப்பர் திருவழிபாட்டு கால அட்டவனையில் திருத்தங்கள் மேற்கொண்டபோது, செப்டம்பர் 29-ம் நாள் அன்று அதிதூதர் மிக்கேலுடன் இணைந்து அதிதூதர்களான கபிரியேல் மற்றும் இரபாயேலின் திருவிழாவையும் கொண்டாடப் பணித்துள்ளார். அதற்கேற்ப அதிதூ தர்களின் திருவிழா வழிபாடானது சிறப்புத் திருப்பலி கொண்டாட்டத்தைப் பெற்றது. சிறப்பு செபங்களும் ஏறெடுக்கப்பட்டன. கத்தோலிக்க மற்றும் ஆர்த்தோடாக்ஸ் திருச்சபைகளில் அதிதூ தர்கள் அவர்களுடைய பாதுகாத்தல் மற்றும் பரிந்துரைத்தல் பணிகளுக்காகப் பெரிதும் போற்று தலுடன் நினைவுகூறப்படுகின்றனர். அதிதூதர்கள் திருவிழா திருவழிபாட்டு வாசகங்கள், அதிதூ தர்களின் பண்புகள் மற்றும் பணிகள் குறித்த வையாக இருக்கின்றன. நிறைய திருத்தலங்கள் மற்றும் ஆலயங்களில் அதிதூதர்களுக்கென சிறப்பான பாடல்கள் இயற்றப்பட்டு, திருவழிபாடு மற்றம் இதர நேரங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அத்தகையப் பாடல்கள் அதிதூதர் களின் நற்பண்புகள் மற்றும் குணாதிசயங்களைப் பற்றி எடுத்துரைக்கும் விதத்தில் இருக்கின்றன. குறிப்பாக மிக்கேல் அதிதூதர் காவல் காப்பவ ராகவும், கபிரியேல் நற்செய்தியை நமக்கும் அறிவிப்பவராகவும், இரபாயேல் குணப்படுத்து பவராகவும் போற்றப்படுகின்றனர்.

**கிறிஸ்தவப் பாரம்பரியத்தில் அதிதூதர்கள்**

தொடக்ககாலம் முதலே கிறிஸ்தவ பாரம்பரி யத்தில் அதிதூதர்களுக்கு வணக்கம் செலுத்தும் முறை இருந்து வந்துள்ளது. தொடக்க கால கிறிஸ்தவர்கள் அதிதூதர்கள் கடவுளின் செய்தி களை நமக்குக் கொண்டுவருபவர்களாக அடையா ளம் கண்டுள்ளனர். இதன் பிரதிபலிப்பை நாம் தொடக்ககால கிறிஸ்தவ இறையியலாலர்களான புனித அகஸ்டின் மற்றும் புனித தாமஸ் அக்குவி னாஸ் போன்றோரின் கட்டுரைகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

**அதிதூதர்களின் அடையாளங்கள்**

ஒவ்வொரு அதிதூதருக்கும் ஒரு அடையாளம் தொடர்புடையதாக இருக்கின்றது. திருஅவையில் இருக்கும் கலை மற்றும் உருவப்படங்கள் இதனை நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, புனித மிக்கேல் அதிதூதர் உருவப்படங்களில் அவர் சாத்தானை எதிர்த்துப் போரிடுபவராகவும், கையில் தராசைத் தாங்கியவராகவும், நீதித்தீர்ப்பை நமக்கு நினைவுபடுத்துபவராகவும் இருக்கின்றனர். புனித கபிரியேல் பெரும்பாலும் கையில் லீலி மலர்களைத் தாங்கியவராக அல்லது கையில் எக்காளம் (trumpet) கொண்டிருப்பவராக அவரது உருவப்படங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

புனித இரபாயேல் பெரும்பாலும் கையில் ஒரு கோலும் மீனும் கொண்டிருப்பவராக, அதாவது வழிகாட்டுபவராகவும், குணப்படுத்து பவராகவும் அவரது குணநலன்களை அவரது உருவப்படங்கள் நமக்கு நினைவுபடுத்துகின்றன.

**திருவிவிலியத்தில் அதிதூதர்கள்:**

அதிதூதர்களான மிக்கேல், கபிரியேல் மற்றும் இரபாயேல் பற்றி திருவிவிலியத்தில் நாம் குறிப்புகளைக் காணலாம். அதிதூதரான புனித மிக்கேல் பொதுவாக ஒரு போர்வீரராகவும், கபிரியேல் கடவுளின் செய்தியைத் தாங்கி வருப வராகவும், இரபாயேல் குணப்படுத்துவராகவும் நமக்கு காட்சிபடுத்தப்பட்டுள்ளனர்.

அதிதூதரான புனித மிக்கேல்: மிக்கேல் என்கின்ற எபிரேயச் சொல்லுக்கு, "கடவுளைப் போன்றவர்" அல்லது "கடவுளைப் போன்றவர் யார்?" என்று பொருள்படுகின்றது. மேலும் 'கடவுளைப் போன்ற பலம் பொருந்தியவர் எவரும் இல்லை' என்பதை இது குறிக்கின்றது. பெரும்பாலும் புனித மிக்கேல் அதிதூதர் போர் புரிபவராகவே விவிலியத்தில் குறிப்பிடப்படுகின்றார். இதன் வழியாக சாத்தானிடமிருந்து திருஅவை யையும், அதன் பிள்ளைகளான நம்மையும் காப்பவர் என்று நாம் அறிகின்றோம். விவிலியத்தில் ஐந்து இடங்களில் மிக்கேல் அதிதூதரின் பெயரானது இடம் பெறுகின்றது. மூன்று முறை தானியேல் புத்தகத்திலும் (தானியேல் *10:13,21, 12:1*), யுதா (யுதா *1:9*) மற்றும் திருவெளிப்பாடு புத்தகத்திலும் (திருவெளிப்பாடு *12:7*) தலா ஒரு முறையும் இவர் பெயர் இடம்பெறுகின்றது. அனைத்து இடங்களிலும் மிக்கேல் அதிதூதர் சாத்தானுக்கெதிராகப் போர்புரிபவராகக் குறிக்கப் பட்டுள்ளார்.

அதிதூதரான புனித கபிரியேல்: கபிரியேல் என்கின்ற எபிரேயச்சொல்லுக்கு, "கடவுள் எனது வலிமை" என்று பொருள்படும். நற்செய்தியை அறிவித்த அதாவது மரியாவுக்கு மங்கள வார்த்தை அறிவித்த பெருமை இவரையேச் சேரும். விவிலியத்தில் அதிதூதரான கபிரியேலின் பெயர் நான்கு முறை குறிப்பிடப்படுகின்றது. தானியேல் *8:16, 9:21* என இரண்டு முறையும், லூக்கா *1:19* (செக்கரியாவுக்குத் தோன்றுதல்), *1:26* (மரியாவுக் குத் தோன்றுதல்) என இருமுறையும் பெயருடன் குறிப்பிடப்படுகின்றார். பொதுவாக ஓவியங்களில் செக்கரியாவுக்குத் தோன்றும் போது கபிரியேல் அதிதூதர் தலைசாய்த்து நின்ற வண்ணமும், மரியாவுக்குத் தோன்றும் போது இறைவனின் தாயாகப் போகும் மரியாவுக்கு வணக்கம் செலுத் தும் வண்ணம் முழங்கால்படியிட்டவாறும் உருவகப் படுத்தப்பட்டுள்ளார்.

அதிதூதரான புனித இரபாயேல்: இரபாயேல் என்கின்ற எபிரேயச்சொல்லுக்கு "கடவுளே குணமளிப்பவர்" அல்லது "கடவுளின் மருந்து" என்று பொருள்படும். வழித்துணையாகச் செல்லு தல் மற்றும் குணப்படுத்துதல் போன்ற பணிகளைச் செய்பவராக இவர் திருவிவிலியத்தில் குறிப்பிடப் படுகின்றார். தோபித்து *3:17, 5:4, 7:8, 8:2, 9:1, 9:5, 11:2, 11:7, 12:15*. தோபித்து புத்தகத்தை வாசிக்கும் நமக்கு நம்பிக்கையாளராக அல்லது வாசகராக நமக்கு இரபாயேல் அதிதூதராகத் தோன்றுவார். ஆனால் தோபித்து மற்றும் தோபியா வுக்கும் மற்றவர்களுக்கும் அவர் ஒரு மனிதராக, வழிபோக்கராக, நண்பராகத் தோன்றுவார். இது வானதூதர்களின் உண்மை நிலையை நமக்கு எடுத்துரைக்கின்றது. ஓவியங்களில் இரபாயேல் அதிதூதர் தோபியாசின் கண்களோடு கண்கள் பார்த்து உரையாடுபவராக, கரங்கள் கோர்த்துக் கொண்டு வழிநடப்பவராக, வழிநடத்துபவராக, மருத்துவ உதவிகள் செய்து தோபித்தைக் குணப்படுத்துபவராக, தோபியாவின் திருமண வாழ்வு இனிதே தொடங்கிட தடையாயிருந்த சாத்தானைக் கட்டிப்போட்டு நலம் விரும்பியாக உருவகப்படுத்தப்படுகின்றார்.

அதிதூதர்களின் விழா நமக்கு கற்பிக்கும் பாடம்: கடவுள் நம்மை சாத்தானின் சோதனை களிலிருந்து காக்கும் வண்ணம், நமக்கு நற்செய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும் வண்ணம், அவரது திட்டங்கள் நமது வாழ்வில் செவ்வனே நடந்திடும் வண்ணம், நம்முடைய அன்றாட வாழ்வில் உடல் சோர்வு, நோய்கள் மற்றும் ஆன்மீக சோர்வுகளில் காத்திடும் வண்ணம், நமக்கென்றும் வானதூதர்களைப் பணித்துள்ளார். இந்த வானதூதர்கள் மனிதர்களின் வடிவிலோ, அல்லது நம்முடைய கண்களுக்குப் புலப்படாவண்ணம் மறைவான விதத்திலோ நம் இதயத்தோடு கடவுளின் செய்திகளை வெளிப்படுத்திக்கொண்டுதான் இருக்கின்றார்கள். அவர்களுக்கு செவிசாய்த்திடும் பக்குவம் பெற நாம் அழைக்கப் படுகின்றோம். தோபித்தோடு இணைந்து "கடவுள் போற்றி! அவரது மாபெரும் பெயர் போற்றி! அவருடைய தூய வானதூதர் அனைவரும் போற்றி! அவரது மாபெரும் பெயர் நம்மைப் பாதுகாப்பதாக! எல்லா வானதூதரும் என்றென்றும் போற்றி!" (தோபித்து 11:14) என்று போற்றுவோம். வானதூதர்கள் வழி இறைவன் கொடுக்கும் செய்திகள் மற்றும் வழிகாட்டுதலுக்கு செவி மடுப்போம்.

**- தொடரும் .....**



# திருஅவைச் செய்திகள்!

## தீவிரவாதம் பெருகி வரும் உலகில் மதங்கள் ஒன்றிணைய வேண்டும்!

"பிரிவினைகளும் தீவிரவாதமும் அதிகரித்து வரும் இவ்வுலகில், அமைதியையும் ஒன்றிப்பையும் மேம்படுத்த மதங்களுக்கு இடையே வலுவான ஒத்துழைப்பு அவசியம்" என்று கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ. கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையிலான உறவை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட அனைத்து ஆபிரிக்க கிறிஸ்தவக் கூட்டமைப்பின் பொறுப்பாளர்களைத் திருப்பீடத்தில் சந்தித்துப் பேசியபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை, மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை வளர்க்க அந்த அமைப்பினர் மேற்கொள்ளும் முயற்சிகளைப் பாராட்டினார். மேலும் "வெவ்வேறு மத மற்றும் கலாசாரப் பின்னணியைக் கொண்ட மக்கள் அமைதியாகவும், ஒத்துழைப்புடனும் வாழ முடியும் என்பதற்கு இவர்களது பணி ஒரு சான்று என்றும் குறிப்பிட்டார்.

பெரும்பாலும் உலகளாவிய உண்மைகளையும் விழுமியங்களையும் பிற மதங்களும் வெளிப்படுத்துகின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, அவர்களையும் மதித்து நடக்க வேண்டும் என்ற தனது கருத்தினை மீண்டும் உறுதிப் படுத்தினார். "உண்மையான ஒன்றிப்புக்கு வெளிப்படைத் தன்மை, உரையாடல் மற்றும் பிறரை எதிர்கொள்ள விருப்பம் ஆகியவை இன்றியமையாதவை" என்றும் வலியுறுத்திக் கூறினார் திருத்தந்தை.

## இலங்கையில் இயேசு சபை அருள்பணியாளருக்கு இரங்கல்!



இலங்கை மக்களால் அலாய் என அன்போடு அழைக்கப்படும் இயேசுசபை அருள்பணியாளர் அலோசியஸ் பீரிஸ் அவர்கள் நெடுநாள் உடல் நலக்குறைவிற்கு பின் தனது 91-வது வயதில் இறைபதமடைந்த நிலையில் அந்நாட்டு மக்கள் அவருக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்தியதாக யூக்கான் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. மார்ச் மாதம் 24ம் திகதியன்று நடைபெற்ற அவரது இறுதிச் சடங்கில் ஏராளமான இலங்கை மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியதுடன் அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காகவும் இறைவேண்டல் செய்தனர் என்று கூறியுள்ளது செய்தி நிறுவனம். பௌத்த-கிறிஸ்தவ மதங்களுக்கு இடையேயான உரையாடலில் ஒரு முன்னணி ஆளுமையாக விளங்கிய அருள்பணியாளர் பீரிஸ் அவர்கள், மதப் பிரிவினைகளைக் கடந்து ஒன்றிப்பு, நீதி மற்றும் புரிதலை மேம்படுத்துவதற்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்த ஓர் உறவுப் பாலமாக நினைவு கூரப்படுகிறார்.




## இறைவனின் அருள்கொடையை உள்ளகத்தில் கண்டறியுங்கள்!

வருகிற ஏப்ரல் மாதம் 26-ஆம் திகதி சிறப்பிக்கப்படவிருக்கும் 63-வது உலக இறையழைத்தல் நாளுக்கென, மார்ச் மாதம் 24ம் திகதியன்று வெளியிட்டுள்ள செய்தியொன்றில், 'இறையழைத்தல் என்பது ஒரு முறை கிடைக்கும் வரம் அல்ல, மாறாக அது வாழ்நாள் முழுவதும் விரியும் ஒரு பாதை. அது வளர்ந்து கனிதரவேண்டும் எனில், இறைவனுடனான உறவின் மூலம் நாள்தோறும் அது பேணி வளர்க்கப்பட வேண்டும்" என்று கூறியுள்ள திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிம்மாசனம்

கதையாசிரியர்: அ.முத்துலிங்கம்

கதைத்தொகுப்பு: சமூக நீதி

நன்றி: இணையம்

- சென்ற இதழ்த் தொடர்ச்சி ......

என்னுடைய தட்டச்சு மெசினில் யூ, கே, எக்ஸ் போன்ற எழுத்துக்கள் அடித்தவுடன் அவை தாளுடன் ஒட்டிவிடும். அவற்றை விரல்களால் கிளப்பிவிடவேண்டும். அந்த எழுத்துகள் வராத வசனங்களாக உண்டாக்கி டைப் அடித்துக் கொண்டிருந்தேன். வேலை முடிந்த சமயம் வாசலில் நிழல் தட்டியது. சோமபாலாவைப் பார்த்து திடுக்கிட்டேன். முகம், முடி, கை, கால் எல்லாம் மரத்தூள் அப்பியிருந்தது. ஆளே மாறி விட்டான்.... "உள்ளே வா" என்றேன். குறுக்காக அறுத்த முழுப் பலகை ஒன்றை தலையிலே தூக்கி வந்திருந்தான். வட்டமான பலகையின் விளிம்புகளை இரண்டு கைகளை நீட்டினாலும் தொடமுடியாது. அதன் சுற்றளவு 20 அடி இருக்கும். மரத்தின் கனத்தில் அவன் புஜங்கள் முறுகி ஏறின. நிலத்தில் கிடத்திவிட்டு "இது என்ன மரம் தெரியுமா?" என்றான். "தெரியாது...." என்றேன். "போபாப்.... சிங்களத்திலும் தமிழிலும் இதன் பெயர் பெருக்கா மரம். பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் இந்த வகை மரம் ஆப்பிரிக்காவில் இருந்து வந்தது. வளையங்களை எண்ணிப் பார்த்தால் வயது தெரியும். இந்த மரத்தின் வயது தெரியுமா? 400 வருடம். 400 வயது மரத்தை வெட்டிவிட்டார்கள். இதைப்போல இன்னொரு மரம் கிடைக்க நாம் 400 வருடம் காத்திருக்க வேண்டும். இதோ இந்த நடுப்புள்ளி இருக்கிறதே இதுதான் இது தோன்றிய காலம். அரசன் விமலதர்மசூரியா ஆண்ட காலம். 400 வருடங்களுக்கு முன்னர் கண்டியை ஆண்டவன். கிறிஸ்தவ சமயத்திலிருந்து புத்த சமயத்துக்கு மாறியவன். பெரிய படையோடு வந்த போர்த்துக்கீசரை தன் சிறிய படையை திரட்டி தந்திரத்தால் துவம்சம் செய்தவன். அவன் காலத்தில் தோன்றிய மரம் இது. இதோ இந்தப் புள்ளியில் இலங்கையின் கடைசி அரசன் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் வேலூர் சிறையில் இறந்தான். இந்தப் புள்ளியில் இலங்கை சுதந்திரம் அடைந்தது..." இப்படியே சொல்லிக்கொண்டு போனான்.

"அவ்வளவு நிச்சயமாகச் சொல்ல முடியுமா?" "முடியும். அத்துடன் இன்னும் ஒன்று. இந்த மரம் அரிதானது. கடைசிக் கணக்கெடுப்பில் 40 மரங்கள் தான் இருந்தன. அதிலே ஒன்றை இன்று வெட்டி விட்டார்கள். அதுதான் எனக்கு வருத்தமாயிருக்கிறது. மரங்களை அழித்து வரும் காசில் வாழ்வது வெட்கமாயிருக்கிறது. நான் வேலையை விடப்போகிறேன்...." "நீ வேலையை விடமாட்டாய். மரங்களை அளவுக்கு அதிகமாக நேசிக்கிறாய். அவற்றின் அருகாமை உனக்கு தேவை...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சொன்ன மாதிரி சோமபாலா வேலையை விட்டுவிட்டான் என்று நினைத்தேன். ஒருநாள் காலை வருகை அட்டையுடன் எனக்கு முன்னால் நின்றான். "என்ன மறுபடியுமா?..." என்றேன். அவனுக்கு கோபம் வந்துவிட்டது. அவன் அப்படிப் பேசியதே இல்லை. "நான் என்ன குழந்தைப் பிள்ளையா? திருப்பித் திருப்பி சொல்லி என்ன பிரயோசனம். நான் பிந்தி வந்த காரணம் தெரியுமா? நானும் என் தகப்பனாரும்தான் வீட்டில். எனக்கு ஒருவித உதவியும் இல்லை. நான் வீட்டில் இல்லாத நேரத்தில் அவர் வெளியே போய் திரும்பிவர வழி தெரியாமல் தொலைந்து போய் விடுகிறார். அவருக்கு மறதி வியாதி. நான் காலையில் அவரைக் கழுவி சாப்பாடு ஊட்டி கட்டிலில் படுக்கவைத்து, முழங்காலில் முத்தமிட்டுவிட்டு, கட்டிலோடு சேர்த்து அவரைக் கயிற்றினால் கட்டிவிட்டு வேலைக்கு வருகிறேன். சிலசமயம் கொஞ்சம் நேரம் பிந்திவிடுகிறது. நான் மாலை போய்த்தான் அவரை விடுதலை செய்கிறேன். மறுபடியும் அவரைக் கழுவி சாப்பாடு கொடுத்து முழங்காலில் முத்தமிட்டு அவரைத் தூங்கவைப்பேன். நான் பிந்தி வந்தால் தண்டனையாக கூலியை பிடித்துவிடுகிறீர்கள். இதிலே என்ன பெரிய நட்டம். நான் மெசின் வேலையா செய்கிறேன். எனக்கு கூட்டி அள்ளும் தொழில்தானே...."

அந்தநேரம் பார்த்து பிரியங்கா உள்ளே நுழைந்தாள். பொது மேலாளரின் காரியதரிசி. அங்கே வேலை செய்யும் ஒரே பெண். அவளுடைய உடை பழைய காலத்து ராணியின் ஆடை போல காலையும் தாண்டி நீண்டிருந்ததால் நிலத்திலே அரைந்தது. சேற்றிலே நடப்பதுபோல காலைத் தூக்கி தூக்கி வைத்து நடந்தாள். நான் பாடுபட்டு அச்சடித்த தாளைத் திருப்பித் தந்தாள். யூவோ அல்லது கேயோ தாளில் பதியவில்லை என்று மனேஜர் சுட்டிக்காட்டியிருப்பார். "டைப் ரைட்டர் பழுதுபட்டுக் கிடக்கிறது" என்றேன். அவள் ஒன்றுமே பேசாமல் கண்களை எறிந்து கூரையை பார்த்து நாடகத்தனமாக சுழற்றிவிட்டுத் திரும்பினாள். நான் சோமபாலாவிடம், "இந்த பெண்ணை உனக்குப் பின்னால் அழைத்துக் கொண்டு போ. அவளுடைய ஆடை நீ கூட்ட வேண்டியதை எல்லாம் கூட்டிவிடும்" என்றேன். சோமபாலா வயிற்றைப் பிடித்துக்கொண்டு குனிந்து குனிந்து சிரித்தான். சிரிக்கும்போதுகூட அவன் புயங்கள் திரண்டன.

அறை மகிழ்ச்சியால் நிரம்பியதும் நான் கேட்டேன். "உனக்கு உதவ யாருமே இல்லையா?" "நான் ஏன் மற்றவர்களிடம் உதவி கேட்கவேண்டும். இது என் கடமையல்லவா? ஒரு மரத்தின் நடுதான் அதன் பலம். வைரமாகவிருக்கும். மரத்தின் மூத்த பகுதியும் அதுதான். ஆனால் மரத்துக்கு வேண்டிய உணவை அதனால் கடத்த முடியாது. மரத்தின் பட்டைகள்தான் உணவை கடத்தும் வேலையை செய்கின்றன. அந்தப் பகுதி இளையது. மனிதர்களும் அதுபோலத்தான். முதியவர்கள் குடும்பத்தின் பலம். இளையவர்கள்தான் வேண்டிய உணவை சம்பாதிக்கவேண்டும்...."

அதன் பின்னர் அவன் இரவு வேலைக்குச் மாறிவிட்டதாகச் சொன்னார்கள். அவனைச் சந்திக்கும் சந்தர்ப்பமும் குறைந்துபோனது. ஒருநாள் இரவுவேளையின்போது லொறியில் வந்த மரங்கள் கட்டு அறுந்து விழுந்து உருளத் தொடங்கின. பள்ளத்தில் அவை வேகம் பிடித்து ஓடியதை சோமபாலா கண்டான். அங்கே வேலை செய்த ஆட்கள்மீது மரம் ஏறினால் ஒன்றிரண்டு பேர் சாவது நிச்சயம். சோமபாலா பாய்ந்து வந்து மரக்குத்தி ஒன்றை குறுக்காகத் தூக்கி எறிந்து விபத்தை தவிர்த்துவிட்டான். அடுத்தநாள் காலை அதுவே பேச்சாக இருந்தது.

அந்த வருசம் தொழிற்சாலை நடாத்தும் வருடாந்த பரிசளிப்பு விழாவில் அவனுக்கு பரிசு கிடைக்கும் என்று பேசிக்கொண்டார்கள். நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆட்களின் உயிரை அல்லவா காப்பாற்றியிருந்தான். ஆனால் ஒரு பரிசும் கிடைக்கவில்லை. பொது மேலாளர் என்ன பேசினார் என்ற வதந்தி வெளியே உலாவியது. அவர் சொன்னாராம், "அவனுக்கு பரிசு கொடுப் பதிலும் பார்க்க ஒரு தமிழனுக்கு கொடுக்கலாம்" என்று. "நீ பரிசு எதிர்பார்த்தாயா?" என்று கேட் டேன். அவன் சொன்னான், "மரம் உருளத் தொடங்கியபோது நான் ஓடிப்போய் நிறுத்தினேன். அந்த நேரம் பரிசு கிடைக்குமா என்றெல்லாம் யோசித்தது கிடையாது. அவர் அவருக்கு என்ன எழுதி வைத்திருக்கிறதோ அது அதுதான் நடக்கும்" என்றான். நான் ஒன்றுமே சொல்லவில்லை. "நான் வேலையை விட்டுவிடப்போகிறேன்" என்றான். நான் திரும்பி பார்க்காமல் நடந்தேன்..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமபாலா வேலையை விடவில்லை. இரண்டு வாரம் கழித்து நான்தான் என் வேலையை துறந்தேன். சாமான்களை பயணப் பெட்டியில் அடுக்கிக்கொண்டு பஸ்ஸுக்கு புறப்பட்டபோது. பாதி வழியில் சோமபாலாவிடம் சொல்லவேண்டும் என்று தோன்றியது. அவன் இரவு வேலையில் இருந்தான். தொழிற்சாலை இரவு நேரத்தில் முற்றிலும் வேறுமாதிரி காட்சியளித்தது. வாசலில் இரண்டு பெரிய வருகைப் பதிவு மணிக்கூடுகள் நின்றன. காலை நேரத்தில் தொழிலாளர்கள் வரிசையாக நின்று அடித்துப்பிடித்துக்கொண்டு தங்கள் நேரங்களை அட்டைகளில் பதியும் காட்சி நினைவுக்கு வந்தது. நான் சென்ற நேரம் அங்கே ஒருவரும் இல்லை.

சோமபாலாவைத் தேடிக்கொண்டு போனேன். வழக்கமான இடத்தில் அவனைக் காணவில்லை. மெசின்கள் காது செவிடாகும் ஒலியை எழுப்பின. கட்டடத்தின் ஒதுங்கிய சின்ன மூலையில் தனியாளாக அவன் வேலை செய்தான். என்னை நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடியும் வேலையில் மூழ்கினான். "உன்னை பழைய இடத்தில் தேடினேன்...." என்றேன். என் முகத்தைப் பார்க்காமலே பதில் சொன்னான். "பல மாதங்களையும், அபூர்வ மரங்களையும் வீணடித்துவிட்டார்கள். இப்பொழுது என்னிடம் வேலை வந்திருக்கிறது. பழைய கண்டி அரசர்கள் தங்கள் அரண்மனைகளை அலங்கரிப்பதற்கு விரும்பி பயன்படுத்தியது இந்த மரம்தான். இதன் பெயர் 'ஹலான்ஹிக்'. எப்படியோ வெள்ளைக்காரனிடமிருந்து இது தப்பிவிட்டது. இதிலிருந்து எழும்பும் நறுமணம் அரண்மனையையே நிறைக்கும். கறுப்பு என்பது நிறமே இல்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள். மரத்தை மினுக்க மினுக்க அதன் மினுமினுப்பு கூடிக்கொண்டே போகும். இதைப்போல ஒளிவிடும் கறுப்பு மரம் உலகத்திலேயே கிடையாது...."

கைப்பிடியில் இரண்டு வாய் திறந்த சிங்கங்கள் தத்ரூபமாக நின்றன. கால்களும் பாய்வதற்கு தயாரான சிங்கத்தின் கால்கள் போலவே அமைந்திருந்தன. ஒரு குழந்தைப் பிள்ளையை அரவணைப்பதுபோல மெதுவாக அந்த கைப்பிடிகளை மினுக்கினான். அது கறுப்பு ஒளியை வீசியது. அவன் வேலையில் ஆழ்ந்துபோய் இருந்தான். கலை என்று வந்துவிட்டால் எல்லாம் மறந்துபோகும் போலும். "இதைப்போன்ற நார்வரிகளை எங்கேயும் பார்க்க முடியாது. அவற்றின் உள் அணுத்துகள்களின் ஒழுங்கமைதி அற்புதமானது. மரங்களின் அரசன் இதுதான்..."



"சிம்மாசனமா செய்கிறாய்?" எங்குமே பார்க்காத ஒரு பார்வை அவனுக்கு வந்தது.

"நான் நாற்காலிதான் உருவாக்குகிறேன். ஒரு மன்னன் உட்கார்ந்தால்தான் அது சிம்மாசனம் ஆகும்...."

"நான் வேலையை விட்டுவிட்டேன். உன்னிடம் சொல்லிவிட்டுப் போவதற்காகத்தான் வந்திருக்கிறேன்" என்றேன். அவன் ஒன்றுமே பேசவில்லை. குனிந்து மிகக் கவனமாக மினுக்கிக்கொண்டு இருந்தான். ஏதோ அவன் மூளையின் உள்ளே ஓடியது. ஆனால் சொல்லாக வடிவம் பெறவில்லை. அவனுக்கு கிடைக்கவேண்டிய கூலியை தாறுமாறாக வெட்டிய ஒருவரிடம் என்ன பேச்சு என்று அவன் நினைத்திருக்கலாம்.

நான் கொழும்புக்கு போகும் கடைசி பஸ்ஸைப் பிடித்தேன். மூன்று மணிநேரம் பயணம் செய்ய வேண்டும். கட்டிலில் கட்டப்பட்டு கிடக்கும் கிழவர் ஒருவரின் ஞாபகம் மனதில் வந்தது. ஆறாம் ஜோர்ஜ் மன்னர் அமர்வதற்கு தகுதியான உத்தமமான சிம்மாசனம் கறுத்து மினுங்கி உருவாகும் காட்சி தொடர்ந்தது. சிவப்பு மையில் நேரம் அச்சடித்த அட்டைகளை வைத்துக்கொண்டு வரிசையாக தொழிலாளர்கள் நிற்கும் காட்சி அடுத்து. தன்பாதை வெளிச்சத்தை தானே உண்டாக்கிக்கொண்டு பஸ் இருளை நோக்கி ஒளிக்கோடாக ஓடிக்கொண்டிருந்தது.

ஒருவர் வாழ்நாளில் அருமையாகக் கிடைக்கும் என் நடுநிசி மணித்தியாலங்கள், தன் தகப்பனாரிலும் பார்க்க மரங்களை நேசிக்கும் ஒருவனைப்பற்றி சிந்திப்பதிலேயே கழிந்தது.....

- முற்றும் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்தவம் மாணவர் பக்கம்

க.பொ.த. உயர்தரம்

## மாதிரி வினாத்தாள் - பகுதி - 1

- நில்மினி கஜேந்திரன்

தொடர் XXXIII

**மாணவர் பக்கம்**

ஒக்டோபர் – நவம்பர் – டிசம்பர் – 2025

விடைகள்

| | | |
|---|---|---|
| 1) 5 | 5) 4 | 9) 2 |
| 2) 5 | 6) 1 | 10) 2 |
| 3) 5 | 7) 2 | |
| 4) 2 | 8) 3 | |

1. இணைத்திருமுறை நூல்கள் என்பதன் பொருள் என்ன?
   1. நூல்களின் தாய்   2. இறைஏவுதல் பெற்றவை   3. இரண்டாவது தாய் அங்கீகரிக்கப்பட்டவை
   4. மறைநூல்   5. பொது மக்களின் நூல்

2. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர் யார்?
   1. மோசே, ஆமோஸ்   2. யோசுவா, நாத்தான்   3. கிதியோன், ஆபகுக்
   4. நாகூம், அபகூக்கு   5. சாமுவேல, எலிசா

3. பஞ்சாகமம் எந்த நூல் தொகுதியைச் சேர்ந்ததாகும்?
   1. இறைவாக்கினர் நூல்கள் தொகுதியை சேர்ந்ததாகும்
   2. வெளிப்பாட்டு இலக்கிய தொகுதியைச் சேர்ந்ததாகும்.
   3. வரலாற்று நூல்கள் தொகுதியைச் சேர்ந்ததாகும்
   4. சட்ட நூல்கள் தொகுதியைச் சேர்ந்ததாகும்
   5. திருமுகங்கள் தொகுதியைச் சேர்ந்ததாகும்

4. யூதேயா, சமாரியா, இதுமேயா பிரதேசங்களுக்கு ஐந்தாவது ஆளுநராக இருந்தவர் யார்?
   1. போந்தியு பிலாத்து   2. ஏரோது   3. ஏரோபோவாம்
   4. ஏரோது அந்தியாஸ்   5. பிலிப்பு

5. செபத்தின் புதையல் எனப்படுவது எது?
   1. ஞானநூல்கள்   2. திருப்பாடல்கள்   3. சட்ட நூல்கள்
   4. பக்திப்பாடல்கள்   5. புகழ்ச்சிப்பாடல்

6. ஆண்டவராகிய கடவுள் களிமண்ணால் மனிதனைப் படைத்ததிலிருந்து இறைவன் எவ்வாறு வர்ணிக்கப்படுகிறார்?
   1. விவசாயியாக   2. தோட்டக்காரனாக   3. குயவனாக
   4. அறுவைச் சிகிச்சையாளராக   5. தையற்காரனாக

7. பலஸ்தீன நாட்டிற்கு முதுகெலும்பு போல் அமைந்துள்ள மலைத்தொடர் எது?
   1. மேற்கு மலைத்தொடர்   2. கிழக்கு மலைத்தொடர்   3. வடக்கு மலைத்தொடர்
   4. தெற்கு மலைத்தொடர்   5. தெற்கு மலைத்தொடர்


8. இறையாட்சிக்குள் நுழைவதற்கு விருப்புவோர் உலகிற்கு செயற்பட வேண்டிய முறைகளை எடுத்துக்காட்டும் உருவங்கள் எவை?
   1. முத்து, உப்பு   2. கடுகு, உப்பு   3. உப்பு, ஒளி
   4. வெளிச்சம், இருள்   5. ஒளி, இருள்

9. நற்கருணையில் நாம் மனிதக் கிறிஸ்துவையே உட்கொள்கின்றோம் எனக்கூறியவர் யார்?
   1. ஆயர் பவியான்   2. ஆயர் நெஸ்தேரியுஸ்   3. ஆயர் பிளேவியன்
   4. ஆயர் செலஸ்ரீன்   5. குரு ஆரியுஸ்

10. பெலாஜியப் பேதகத்திற்கு எதிராகக் குரல் கொடுத்தவர் யார்??
   1. புனித அகுஸ்தீனார்   2. புனித அத்தனாசியார்   3. புனித பவியான்
   4. புனித வலேரியன்   5. புனித பசில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரணம் கொன்ற யூதாஸ்



■ டெனிஸ்டன்

முழக்கயிற்றில் தொங்கினான் யூதாஸ்
மூச்சடங்கி போயினான் யூதாஸ்
என்று இயம்பிய வார்த்தைகளின் தொடர்ச்சியாக
கண்விழித்தான் யூதாஸ்
கல்லறை திறந்தானவன்
கண்ணில் பட்ட மனிதரெல்லாம்
கயவனாக்க துண்டு துண்டாய் பிரிந்து
என்புதோலோடு கலந்தான் யூதாஸ்
என்றொரு வாக்கியமும் இணைத்துக்கொள்க

கூடத்திரிந்தானவன் கோமகன் பாதையெல்லாம்
தர்மவுரை கேட்டானவன்
பணப்பை மடியேந்தியவன் மனதில்
விசப்பை முளைத்ததனால்
கூட நடந்தவன் குழிபறித்தான்
குருசு மரமீதில் ஏற்றியவன் பழிமுடித்தான்
புழுவாய் துடித்தவன் புழுதிக்கு
உடலை இரையாக்க கொண்ட சித்தம்
பண்ணியவன் போதனையுரைக்க
ஏன் மனமெழவில்லையோ...!

நயவஞ்சகமும் நரிக்குணமும்
காசு பணம் தந்தால்
கழுத்தறுக்கும் தந்திரமும்
குருவாகவே நின்றாலும்
கொலைமுடிக்கும் சூட்சுமமும்
யூதாசின் துண்டங்களாடும் வெறியாட்டமே!


காவியம் சுமந்த சகுனிகளும் எம்
வீரமறவர் வரலாற்றில்
கருப்படித்த காரியவாதிகளும்
அரவணைக்க கரம் நீட்டி
அடிமடி துளாவும் அரசியல் வாதிகளும்
காலடி நிழலாய் தொடர்ந்து
காலைவாரும் குருத்துரோகிகளும்
எட்டப்பன்களும் எடுபிடிகளும் எல்லாருமே
இறந்தானென்று நீங்கள் கூறும்
யூதாஸ் ஆண்டாண்டாய் எடுக்கும்
அவதாரமென காண்கின்றேன் ....

காட்டிக்கொடுத்தே காலாகாலம்
பழகிப்போன நீயும் நானும்
காலசரிதத்தில் கணக்குகளை திருத்திக்கொள்ள
காலச்சக்கரத்தை திருப்பும் சக்தியற்றவர் நாம்
வட்டியும் முதலுமாய் பொட்டிகட்டி
எம் பாவங்களை புதைக்க
வரம் ஒன்று கேட்டு வருவாயா கிறிஸ்தவனே...!

தவக்காலம் அழைக்கிறது
யூதாஸ் உன்னையும்
பிலாத்துவான என்னையும் தான்
மனஸ்தாபங்கள் மனதை மெழுகாய் உருக்கினால்
மறுபடி அந்த யூதாஸ் முழக்கயிற்றில் தொங்கட்டும்
மனந்திருப்பி நீ மனிதனாகிடு
மறுஅவதாரமின்றி யூதாஸ்
மண்ணோடு மண்ணாகட்டும்....



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media




கடுக்கதை - 142

# சாண் ஏற முழம் சறுக்கும்

அன்ரன் தலையை தடவிக்கொண்டு ஆழமாக சிந்தித்துக்கொண்டிருந்தார். அடிமட்ட வாழ்க்கையில் இருந்து படிப்படியாக முன்னேறிவந்து அரசாங்க நிறுவனமொன்றின் உயர் அதிகாரியாக நிமிர்ந்து நிற்கின்றார். கறைபடியாத கைகளை உடையவர்.

வீடமைப்பு வங்கியில் கடன்பெற்று, காணிவாங்கி வீடு கட்டி, நிம்மதியாக வாழ்பவர். கடந்த வருடம் கடன் நிலுவையெல்லாம் முடிவுக்கு வந்தது. இப்போது முழுச்சம்பளம் பெறுகிறார்.

இனி, சம்பளத்தில் கொஞ்சம் மிச்சம் பிடித்து அதனை சேமிப்பாக்கி சிறிய வாகனம் ஒன்றை வாங்க வேண்டும் என்பது அவரின் கனவு; பிள்ளைகளின் படிப்புச் செலவுகளையும் பார்க்க வேண்டும்.

வாசலில் தபால்காரரின் மணிச்சத்தம் கேட்டது..... பதிவுத் தபாலொன்று வந்திருந்தது. அதை வாங்கி உடைத்து வாசித்தார்.

அது வங்கியொன்றின் இறுதி அறிவித்தல்

"தாங்கள்....... என்பவருக்கு கடன் பிணையாளராக ஒப்பமிட்டுள்ளீர்கள். அவர் கடன் தவணைகளை பல மாதங்களாகச் செலுத்தவில்லை. அவரைத் தொடர்பு கொள்ளவும் இயலவில்லை. எனவே அவரின் கடன் தொகையைத் தாங்கள் செலுத்த வேண்டியுள்ளது. இக்கடிதம் கிடைத்து ஏழு நாட்களுக்குள் எங்கள் வங்கியின் கடன் அலுவலகரைச் சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்"

இப்போது அன்ரன் தலையைத் தடவாமல், முடியைப் பிடித்து பிய்த்துக் கொண்டிருந்தார்

'சாண் ஏற.........'




தெரிந்து கொள்வோம்

செவ்வாழைப் பழத்தில் ஏராளமான மருத்துவ குணங்கள் இருப்பதாக ஊட்டச்சத்து நிபுணர்கள் கூறுகின்றனர். செவ்வாழைப்பழத்தில் குறைவான கலோரிகள் இருப்பதால் எடையைக் குறைக்க விரும்புவோர் சாப்பிடலாம். இதில் உள்ள பொட்டாசியம் சிறுநீரகத்தில் கற்கள் உருவாகாமல் தடுக்கும். இதயநோய் மற்றும் புற்றுநோய் ஏற்படும் ஆபத்தைத் தவிர்க்கலாம். இதிலுள்ள கல்சியம் எலும்புகளை வலுப்படுத்தும் என்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media



# இலக்கிய மஞ்சரி



■ ஆழியோன்

## மனப்போக்குத்தான் எல்லாமே

**'ஜெ**ஃப் கெல்லர்' அவர்கள் எழுதிய "மனப்போக்குத்தான் எல்லாமே" என்னும் தலைப்பிலான நூலொன்றை வாசிக்கக் கிடைத்தது.

ஜெஃப் கெல்லர் (Jeff Keller) என்பவர் ஒரு பிரபலமான நூலாசிரியர், பேச்சாளர், கருத்தரங்குகளை தலைமை தாங்கி நடத்துபவர். 'Attitude is Everything' என்ற நிறுவனத்தின் தலைவர். பத்தாண்டுகள் வழக்கறிஞராக பணியாற்றியுள்ள அவர் பின்னர் சாதனையாளர்களை உருவாக்கும் பேச்சாளராக மாறினார். தனக்குக் கீழ் வேலை பார்ப்பவர்கள் நேர்மனப்போக்கு கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்ற உயர் அதிகாரிகளுடனும், சாதனையாளர்களை உருவாக்க வேண்டும் என விரும்பும் நிறுவனங்களுடனும் இணைந்து பணியாற்றிவருகின்றார்.

"மனப்போக்கை மாற்றுங்கள்" "வாழ்க்கையை மாற்றுங்கள்" (Change your Attitude ... Change your Life) என்பது தான் அவரது அடிப்படைத் தத்துவம்.

அவர் தனது நூலை மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளார்

- பகுதி 1 : மனதில் தான் வெற்றி தொடங்குகின்றது.
- பகுதி 2 : கவனமாகப்பேசுங்கள்
- பகுதி 3 : செயலில் இறங்குபவர்களுக்கு பிரபஞ்சம் உதவுகின்றது.

இவர் தனது முன்னுரையில் பின்வரும் சில விடயங்களைக் குறிப்பிடுகின்றார்.

"1980இல் சட்டம் தொடர்பான பட்டம் பெற்றேன். பின்னர் 'பார் கவுன்சில்' பரீட்சையில் தேறி நியுயோர்க் நகரத்தில் வழக்கறிஞர் ஆகினேன். என் தனிப்பட்ட வாழ்க்கை ஏறுமுகமாக இருந்தது. வாழ்க்கையில் வெற்றியையும், மகிழ்ச்சியையும் நோக்கி நான் பீடுநடை போட்டுக்கொண்டிருந்தேன் அல்லது அப்படி நான் நினைத்துக்கொண்டிருந்தேன்.

நான் சில ஆண்டுகள் வழக்கறிஞராக பணியாற்றிய பிறகு நான் மகிழ்ச்சியாக இல்லை என்பதை உணர்ந்தேன்.

ஒரு வழக்கறிஞராக இருப்பதிலுள்ள சில விடயங்களை நான் நேசித்தேன் என்பது உண்மை தான். மக்கள் தங்கள் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள அவர்களுக்கு என்னால் உதவ முடிந்தது எனக்குத் திருப்தியளித்தது.

ஆனால் வழக்கறிஞர் வேலை தொடர்பான பல விடயங்கள் எனக்குப் பிடிக்கவில்லை. ஏனெனில், அவை என்னுடைய வாழ்க்கையை என்னிடமிருந்து பறித்துக்கொண்டதாக தெரிகின்றது. ஒரு வழக்கு பத்துமுறைக்கு மேல் தள்ளிப் போடப்படுவது சர்வசாதாரணமாக இருந்தது.




நான் தொடர்ந்து கடினமாக உழைத்தேன் என்றாலும், வழக்கறிஞர் வேலை குறித்த அதிருப்தி எனக்கு மென்மேலும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. நான் விரக்தி அடைந்தேன். மனச்சோர்வால் பாதிக்கப்பட்டேன். எப்போதும் தலைவலி என்னை வாட்டியெடுத்தது. என் வயிறு எப்போதும் புரட்டிக்கொண்டேயிருந்தது. மருத்துவப் பரிசோதனைகளில் எந்தக் கோளாறும் இல்லையென தெரியவந்தது. என் வாழ்க்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குறிப்பிட்டத்தக்க மாற்றம் கண்டிப்பாகத் தேவை என்பதை உணர்ந்தேன். ஒருநாள் வாய்விட்டு உரக்கக் கூறினேன்.

"வாழ்க்கையில் இதைவிட மேம்பட்ட விடயங்கள் இருந்தாக வேண்டும். இந்த வேதனையையும் மகிழ்ச்சியின்மையையும் கடந்த ஏதோ ஒன்று நிச்சயமாக இருக்கவேண்டும்.

நான் ஊக்குவிப்பு புத்தகங்களையும், ஒலிப் பதிவுகளையும் நாடினேன். நெப்போலியன், ஹில் ஆக்மென்டினோ... போன்றோரின் நூல்களை படிக்கத் தொடங்கினேன். ஜிக் ஜிக்லர், ஏர்ல் நைட்டிங்கேல், ஜிம்ரோன் போன்றவர்களின் ஊக்குவிப்பு ஒலிப்பதிவுகளை நான் ஆர்வத்துடன் கேட்டேன். நாக்கு வரண்டுபோய் பல நாட்களாகப் பாலைவனத்தில் அலைந்து திரிந்துகொண்டிருந்த ஒருவன் திடீரென்று நீரோடையைக் கண்டால் எப்படி உணர்வானோ அப்படி நான் உணர்ந்தேன். இப்போது "என் வயது 57" என்று கூறினால் கேட்பவர்கள் "அப்படித் தெரியவில்லை இளையவராகத்தான் தெரிகின்றீர்கள்" என்று கூறுவதை உங்களிடம் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

இவை அனைத்திற்கும் மனப்போக்குத்தான் காரணமென்று ஜெ.்.ப் கெல்லர் கூறுகின்றார்.

இப்புத்தகத்தின் "மனதில்தான் வெற்றி தொடங்குகின்றது" என்ற முதலாம் பகுதி மனப்போக்கின் ஆற்றலும் உங்கள் நம்பிக்கையும் எவ்வாறு எங்கள் எதிர்காலத்தை வடிவமைக்கும் என்பதின் மீது கவனத்தை குவிக்கின்றது.

"கவனமாகப்பேசுங்கள்" என்ற இரண்டாம் பகுதி, நீங்கள் பேசுகின்ற விதத்தின் மீது கவனத்தைக் குறிக்கின்றது. உங்கள் மனப்போக்கு எவ்வாறு உங்களுடைய வார்த்தையில் பிரதி பலிக்கிறது என்பதையும் நேர்நோக்கு வார்த்தைகள் எங்களுடைய இலக்கை நோக்கி எங்களை எவ்வாறு உந்தித் தள்ளும் என்பதையும் கற்றுக் கொள்ளலாம்.

"செயலில் இறங்குபவர்களுக்கு பிரபஞ்சம் உதவுகின்றது" என்ற மூன்றாம் பகுதி, நாங்கள் நேர்த்திசையில் சிந்தித்தாலும், பேசினாலும், நாம் செயலில் இறங்காவிட்டால், எங்களால் எங்களுடைய கனவை நனவாக்க முடியாது என்பதைச் சொல்கிறது. அதாவது நாங்கள் கால் மீது கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டு இருந்தால், வெற்றிதேவதை எம்முன் மண்டியிடமாட்டாள் என்பதை விளக்குகின்றது.

இப்புத்தகத்தை முழுமையாக வாசித்து முடித்தால், எம் மனதில் ஒரு உற்சாகமும், உத்வேகமும் பீறிட்டு எழுவதை நாம் உணரலாம்.

**குறிப்பு:** இந்நூலை மட்டக்களப்பு மாநகரசபையின் பொதுநூலகத்தில் இரவல் பொறலாம். புத்தக எண் LT 017030.





## அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் உருவம் பொறிக்கப்பட்ட தங்க நாணயம்

அமெரிக்காவின் 250-வது சுதந்திர ஆண்டு விழா வருகின்ற ஜூலை 4 ஆம் தேதி கொண்டாடப்படவுள்ளது. அன்றைய நாளில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உருவம் பொறிக்கப்பட்ட 24 கேரட் தங்க நாணயத்தை வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க சட்ட விதிகளின்படி, உயிருடன் இருக்கும் அதிபரின் புகைப்படத்தை நாணயத்தில் வெளியிட அனுமதியில்லை. இதுதொடர்பான சட்டப்பூர்வத்தன்மை குறித்த கேள்விகள் எழுப்பப்பட்டன.

இந்த நிலையில், அமெரிக்க கருவூலச் செயலாளர் ஸ்காட் பெசென்ட்டுக்கு தங்க நாணயங்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு அதிகாரம் இருக்கும் நிலையில், அவரின் விருப்ப உரிமைக்கு இணங்க நாணயத்தை வெளியிட நுண்கலை ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கட்டிளமை



- ந. பார்க்கீபன் -
ஓய்வுநிலை உப பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி.

புயல் வீசும் பருவம்... தடம் மாறும் இயல்பு... என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இந்தப் பருவத்தில் அவளைக் கவனத்தில் கொள்ள அவளுக்கு யாரும் இருக்கவில்லை. அநாதை இல்லத்தில் அவளுக்கு உணவும் உடையும் கிடைத்தால் போதுமென இல்லத் தலைவி நினைத்துக்கொண்டிருந்தாள்.... ஆனால்...

கஹானி பாடசாலைக்குப் போய் வரும் வசதி செய்து கொடுக்கப்பட்டிருந்தது. அவளுக்கு தன்னோடு ஒரே வகுப்பில் படிக்கும் மாணவிகளின் கதைகள்... குடும்ப உறவுகள் தொடர்பான நெருக்கமான சம்பவங்களும் அதன் அனுகூலங்களும் ஏக்கத்தையே கொடுத்தன.

தான் அநாதையானது தன் குற்றமா...? என்ற கேள்வி இப்போது அவளுக்கு அடிக்கடி பிறக்கிறது. கஹானி சின்னக் குழந்தையாக இருந்த போதே தன்னால் அவளை வளர்க்க முடியாது என நினைத்த பாட்டி அவளை அநாதை இல்லத்தில் சேர்த்து விட்டாள்.

பாட்டியும் அரசாங்கம் கொடுக்கும் முதியோருக்கான பிச்சைக்காசில் தன் வயித்தைக் கழுவுவதே பெரும் கஸ்டமாக இருக்கும் நிலையில், அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வழங்கிய ஆலோசனைப்படி கிராம சேவையாளரிடம் சிபாரிசுக் கடிதம் வாங்கி பின்னர் பொலிசில் பதிந்து நீதிமன்ற அறிவுறுத்தலோடு இங்கு கொண்டுவந்து விட்டுச் சென்றாள்.

சில நாட்களின் பின் பாட்டி இறந்த செய்தி அறிந்து இல்லம் பொறுப்பாசிரியருடன் சா வீட்டுக்குச் சென்று வந்தாள் கஹானி. அதோடு இருந்த உறவும் அறுந்து போச்சு.


இல்லத்தில் இருக்கும் போது இயல்பாக இருப்பாள். பாடசாலைக்குச் செல்லும் வேளைகளில்தான் சற்றுப் பரிதவித்துப் போகிறாள்.

அவள் இருக்கும் இல்லத்துப் பொறுப்பாசிரியை நிர்வாகத்துடன் கதைத்து தங்களைப் போன்ற இல்லப் பிள்ளைகளுக்கு பூப்புனித நீராட்டு விழாவை, ஏன் திருமண விழாவைக் கூட இல்லத்துக்கு வந்து உதவும், இல்லத்தில் அக்கறை காட்டும் நலன் விரும்பிகள்... போன்றோரின் ஒத்துழைப்போடு செய்து மகிழ்ச்சிப்படுத்தினாலும் கஹானி பல சமயங்களில் வெறுமை உணர்வை அடைந்து விடுகிறாள்.

பாடசாலையில், பாடசாலைக்கு போய்வரும் பாதையில் சில ஆண்களின் முகங்களை உற்றுப் பார்த்து சபலம் அடைந்த நேரங்களில்... சிரிக்கும் சந்தர்ப்பங்களில்... சில வேளைகளில் யாராவது ஒருவர் கதை கேட்கும் சமயங்களில்... தொடர்ந்து கதைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேண்டும், பழக வேண்டும் போலிருக்கும். ஆனால்... பயம் அவளை அடக்கிக் கொள்ளும்.

ஏன் பயப்பட வேண்டும்...? தன்னுடைய வகுப்புத் தோழிகள் சிலருக்கு ஃபோய் ஃபிரண்ட்ஸ் இருப்பதும் அவர்கள் கதை கதையாய்ச் சொல்வதும்... பயத்தை விட ஆர்வத்தைத் தூண்டுகிறது....

கஹானியின் படிப்பில் ஒன்றிக்காத போக்கை தினமும் அவதானித்த தமிழ் ரீச்சர் வசந்தகுமாரி ஒரு நாள் இங்கு வா எனத் தனியே அவளை அழைத்து 'என்ன பிள்ளை உன்ரை செயற்பாடுகள்...?' என்று கேட்டு விட்டார்.

'இல்லை ரீச்சர்... அப்படியொன்றும் இல்லை...' என்று அவள் கூறிய போதும் தன்னை ரீச்சர் தொடர்ந்து கவனித்திருக்கிறார் என்பது ஒரு பயத்தைக் கொடுத்து அதன் பிறகு கொஞ்சம் கவனமாக நடந்து கொண்டாள்.

அதுவும் ஒரு சில நாட்களின் பின் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக...

அவளுடைய நெருக்கமான வசதியான நண்பி ஒருத்தி பாடசாலைக்கு கைப்பேசியை ஒளித்துக் கொண்டு வந்து கஹானிக்குக் காட்டி கஹானியைத் தூண்டி விடுகிறாள்.

இல்லத்தில் பொதுத் தொலைபேசியும் தொலைக் காட்சி வசதியும் இருந்தாலும் அது பொறுப்பாசிரியரின் நேரடிக் கண்காணிப்பில் இருக்கும். அது ஏனோ கஹானிக்குப் பிடிப்பதில்லை. நண்பியின் கைபேசி... அது பல ஆச்சரியங்களை அவளுக்குக் காட்டுகிறது.

ஆரம்பத்தில் அருவருப்பாய் இருந்த போதிலும் அதைத் திரும்பவும் பார்க்கவேண்டும் போலிருக்கும் அவளுக்கு.

'என்னடி...இப்பிடி? கொஞ்சமும் கூச்சமில்லாமல்...' என்று கஹானி அப்பாவித்தனமாக கேட்கும்போது நண்பி அனுபவப்பட்டவள் போல... அதை மேலும் மேலும் சிலாகித்துக் கூறும்போது கஹானி சிலிர்த்திடுவாள்.

இறுதியில் தனக்கும் ஒரு ஃபோய் ஃபிரண்ட் அவசியம் தேவையென்று முடிவெடுத்து விட்டாள். அந்த அவசரத்தில் தனது சுயம்வரத்தில் தனக்கு மிகவும் பிடித்த அவனைத் தெரிவு செய்தாள்.

தன்னை மறந்தாள்... தன்னாமம் கெட்டாள்... தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே...

இல்லத்தில் கஹானியைக் காணவில்லை என்பது ஊர்ஜிதப்பட்டதும் வழமையான செயற்பாடாக பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது.

இல்லத்தில் விசாரணை.பாடசாலையில் விசாரணை... என நாட்கள் ஓடின. யாரோடு...? எப்போது...? எங்கே போனாள்? என்று யாருக்கும் சரியாகத் தெரியவில்லை.

ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்... என ஒருவர் தொண்ணூறு நாள் முடிய எல்லாம் தெரியும் என்று எல்லோரையும் ஆறுதல் படுத்தினார்

எங்கே இருந்தாலும் சந்தோஷமாக நிம்மதியாக இருக்க வேண்டும் என்று இல்லப் பொறுப்பாசிரியர் தானும் பிரார்த்தனை செய்து ஏனைய பிள்ளைகளையும் பொது பிரார்த்தனை செய்யும்படி கேட்டுக் கொண்டார்.

அந்த அனுபவஸ்தர் சொன்னபடி தொண் ணூறு நாள் முடிய முன்பே வாயும் வயிறுமாக வந்து நின்றாள் கஹானி.

கைபேசியில் பார்த்தவையை அனுபவித்ததன் பயன்... அவள் தேகமெங்கும் தெரிந்தது. எங்கே அவன் என்று இல்லத்தின் பொறுப்பாசிரியர் கேட்டதும் குளறிக் குளறி அழுகிறாள்.

அவன் போதைவஸ்துப் பாவனைக்காகத் திருடியதால் இப்போது மறியலில் என்கிறாள்.

இல்லத்தில் தொடர்ந்து அனுமதிக்க முடியாது ...

– 17ம் பக். பார்க்க....



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அரசியல்

## யதார்த்தங்கள்

- குடிமகன்

ஓரளவு பெரிய கால இடைவெளியின் பின் மீண்டும் சந்திக்கின்றோம். இதற்கிடையில் இலங்கையிலும் சரி, உலகிலும் சரி பல மாறுதல்கள் இடம்பெற்றுவிட்டன. நாம் விரும்பியோ விரும்பாமலோ அவை காலவோட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மட்டக்களப்பு இரவு தபால் புகையிரதசேவை நிறுத்தப்பட்டது தொடர்பாகவும், அதை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தும் தொண்டனின் அரசியல் பக்கம் எழுதியிருந்தது. இதை சிலர் தாம் சொல்வது போன்றும், முக்கிய சிலர் தொண்டன் சொல்கிறது என்றும் சில உயர்மட்டங்களை அணுகியிருந்தார்கள்.

அதன்படி மீண்டும் அப்புகையிரதசேவை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. பொருத்தமான புறப்படுகை, வருகை நேரங்கள் மாற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் சிவப்பு நிற பெட்டிகள் - மிகவும் வசதியானவை இணைக்கப்பட்டுள்ளன. முன்பு ஏழு பெட்டிகள்: இப்போது பத்துப்பெட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஆனால் பிரயாண நேரம்தான் கடுகதி வண்டிக்குரிய நேரமாக இல்லை. எல்லாம் யானைப்பயம்தான்: யானையுடன் மோதினால் புகைவண்டி சாரதிக்கு எதிராகத்தான் சட்ட நடவடிக்கை.

இப்புகையிரதவேவையை மீண்டும் ஆரம்பிப்பதில் பாரளுமன்ற உறுப்பினர்கள் டொக்டர் சிறிநாத், கல்வி நிர்வாகசேவை அதிகாரி ஸ்ரீநேசன், பிரபு ஆகியோர் மிகுந்த ஈடுபாடு காட்டியிருந்தனர். என்னும் விரைவு கருதி தபால் சேவைகள் தபால் திணைக்கள வேன்களில் இடம்பெறுகின்றன.

மட்டக்களப்பின் படுவான் கரை மக்கள் நெற்செய்கையின் முன்னோடிகள், கள்ளம் கபடம் அற்றவர்கள் என்றெல்லாம் அறிந்துள்ளோம். ஆனால் அண்மைக்காலமாக அப்பகுதியில் இடம்பெறும் யானைக்கூட்ட படையெடுப்பு அப்பகுதிமக்களின் இயல்பு நிலைவாழ்க்கையை புரட்டிப்போட்டுவிட்டது. ஆனால் அதை விட படுபயங்கரமான செயற்பாடு அனைத்து மக்களையும் தலைகுனிய வைத்துள்ளது.

பணத்திற்காக, தங்கத்திற்காக பெண்களை அதுவும் அப்பாவி பெண்களை கொலை செய்து அல்லது கொலை முயற்சி செய்து விட்டு கிணற்றுக்கள் வீசி விட்ட சம்பவங்கள் அதிர்ச்சியடைய வைத்துவிட்டன. அத்துடன் கைக்குழந்தையையும் காட்டுக்குள் தூக்கி எறிந்துள்ளார்கள்.

எனினும் பொலிசார் திறமைசாலிகள். சந்தேக நபர்களை வரிசையாக கைது செய்திருக்கிறார்கள். இலங்கை பொலிசார் கைது செய்ய நினைத்தால் குற்றவாளிகளை பிடித்துவிடுவார்கள்: சில வேளைகளில் மட்டும் நினைக்க மறந்து விடுவார்கள் போலும்: இப்போதெல்லாம் அப்படியில்லை.

அதேவேளை யாழ்ப்பாணபல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பெண்மணி– கொலை செய்யப்பட்ட விடயமும் அதிர்ச்சியை தருகின்றது. அனைவருக்கும் மனச்சாட்சி மரத்துவிட்டதா? பெற்றபிள்ளைகள், மருமக்கள், உடன்பிறப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட அனைவரையும் சந்தேகத்துடன்தான் பார்க்க வேண்டியுள்ளதா? போதைப்பொருள் பாவனையும் மனித மனங்களையும், மனித மாண்பினையும் புதைத்துப்போக வைத்துவிட்டன.

மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெறும் யுத்தம். சர்வதேச நாடுகளையும் பொருளாதார ரீதியாகப் பாதித்துவிட்டது. இந்த யுத்தம் ஏன் நடைபெறுகின்றது என்பதற்கு போதிய விளக்கம் எவருக்கும் தெரியவில்லை. ஒன்றிரண்டு தலைகளுக்காக (மூளையில்லாத) மட்டும்தான் இப்போர் நடைபெறுவதாக பாலிப்போடியார் கருதுகின்றார். டிரம்ப் ஒன்று சொல்கின்றார் அதை மற்றையவர்கள் மறுக்கின்றார்கள். பாகிஸ்தான் - இந்தியா யுத்தத்தை தான்தான் முடித்துவைத்ததாக டிரம்ப் அறிக்கை விடுகின்றார். அதை நாற்பது தடவைகளுக்குமேல் சொல்லி விட்டதாக ஊடகமொன்று அறிக்கையிட்டது. அதனை இந்திய பிரதமர் மறுத்துவிட்டார்.

நோபல் பரிசு தனக்குதான் தரப்பட்டிருக்க வேண்டும் என்று அறைகூவல் விடுக்கின்றார்: அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் அதனை டிரம்பிற்காக விட்டுக்கொடுக்க தயார் என்று சொன்னார். நோபல் பரிசிற்கான குழு அப்படியொல்லாம் செய்யமுடியாது என்று அடித்துச் சொல்லிவிட்டது. சிறு பிள்ளைத்தனமான செயற்பாடுகள்.

இப்போது ஈரானுடன் பேச்சுவார்த்தை நடைபெறுவதாக கூறுகின்றார்: அப்படியொரு பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை என்று ஈரான் கூறுகின்றது. இப்படி (கோமாளித்தனமான?) அறிக்கைகள் ஒருபுறமிருக்க இலங்கையில் அரசியல்வாதிகள் அலப்பறைகள் வேறுவிதமாக உள்ளன. மக்களால் விரட்டியடிக்கப்பட்ட எதிர்கட்சி அரசியல்வாதிகளின் எண்ணெய் விலையேற்றம், QR குறியீடுகள், சிலவேளைகளில் வரிசைகள், விவலையேற்றம் என்பனவெல்லாம் இந்த அரசாங்கத்தில்தான், அவர்களின் திறமையின்மையால்தான் ஏற்பட்டுள்ளன என்று கூறுகின்றனர்.

ஆனால் எரிபொருள் வரிசையில் நிற்கும் எந்தவொரு பொதுமகனும். ஊடகப்பேட்டிகளில் அரசாங்கத்திற்கெதிராக ஒருவார்த்தையும் கூறியதாகத் தெரியவில்லை. இலங்கை மக்களுக்கு தெரிந்துள்ள யதார்த்த நிலைமை ஏன் சிங்கள அரசியல்வாதிகளுக்கு புரியவில்லை. அவர்களுக்கு அரசியல் செய்ய அடிப்படை ஏதுக்கள் எதுவுமில்லை போலும். இப்போது தான் நாட்டு மக்களுக்கும் எதிர்கட்சி அரசியல்வாதிகளைப் பற்றி இன்னும் அதிகமாகப் புரிகின்றது. இதிலும் அவர்கள் அனைவரும் எப்போது உள்ளே தள்ளப் படுவோம் என்ற பய அங்கலாய்ப்பில் உள்ளார்கள்.

தமிழ் அரசியல் கட்சிகள் இவ்விடயத்தில் நிதானமாக இருப்பதுபோல் தான் தெரிகின்றது. குறிப்பாக அகில இலங்கை தமிழரசுக்கட்சி நிதானமாக காய் நகர்த்துவதாகத்தான் தெரிவதாக இடியப்பம் விற்கும் அன்னம்மாக்கா சொல்கின்றார்.

### "கட்டிளமை"...

... என்று பொறுப்பாசிரியர் சொல்லி... நீ வேறு இடத்திற்குத்தான் போகவேண்டும் என்ற சட்ட திட்டத்தைக் கூறுகிறார்.

இதற்கு முன்னரும் இல்லத்தில், பாடசாலையில், ஊரில் நடந்த இதேபோன்ற சம்பவங்கள் தெரிந்திருந்தும்... யாரும் பட்டுத் திருந்தும் படிப்பினை தான் காலங்காலமாக நடைபெறுகிறது எனச்சொல்லி இல்லப் பொறுப்பாசிரியர் தன் கடமையை செய்கிறார்.

கேட்டாலும்... புயல் வீசும் பருவத்தில் அது செவிடன் காதில் ஒலிக்கும் சங்கொலியாய்... எருமை மாட்டின் மீது விழுந்த மழைத்துளியாய்...

"தலைமைத்துவம் என்பது பொறுப்பில் இருப்பது அல்ல. உங்களின் பொறுப்பின்கீழ் இருப்பவர்களை பத்திரமாக கவனித்துக் கொள்வது"

–ரத்தன் டாடா
(1937 - 2024)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



A.S. யோகராஜா,
கல்வியியலாளர்.
SLTES - I

# பிள்ளைகள் மனங்களில்
## பொறாமை தீயைத் தடுக்க வேண்டும்

கடந்த வருடம் சத்துருக்கொண்டான் சர்வோதய நிறுவனத்தில் ஆசிரியர்களுக்கு நடைபெற்ற செயலமர்வில் பங்குபற்றுநர்கள் முன்வைத்த வினாக்களுக்கு வளவாளர் திரு A.S யோகராஜா அவர்கள் வழங்கிய பதில்கள் ....

**வினா 01:** பிள்ளைகள் மனங்களை பீடிக்கும் பொறாமை என்பது என்ன? அதை எவ்வாறு விளங்கிக் கொள்ளலாம்?

**பதில்:** சாதாரண காய்ச்சல், தலைவலி போல ஏறக்குறைய எல்லாக் குழந்தைகளுக்கும் வரும் அனுபவம் பொறாமையாகும். மேலும் மகிழ்ச்சி, கோபம், பயம், பதட்டம், மனச்சோர்வு, முரண்பாடு என்பவற்றைப் போலவே பொறாமையும் மனவெழுச்சியுடன் தொடர்புடையதொரு நடத்தையாகும். ஒருவருக்கு ஏற்படும் பொறாமையை வெளிக்காட்டப்படும் பொறாமை, வெளிக்காட்டப்படாத பொறாமை என இரு வகைப்படுத்தலாம். வெளிக்காட்டப்படும் பொறாமையை விட வெளிக்காட்டப்படாத பொறாமையே அதிக தீங்கு பயக்கவல்லதாகும். ஏனெனில் அது வெளிக்காட்டப்படாது, அடக்கப்பட்டு என்றோ ஒருநாள் ஒரு பூகம்பமாக வெளிப்படுத்தப்படலாம். எவ்வாறாயினும் மன அழுத்தம், முரண்பாடு போலவே பொறாமையும் தனியாளின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் குறிப்பிட்டத்தக்களவு பங்களிப்பு செய்யகூடியது எனவும் நம்பப்படுகிறது. ஆனால் இது அளவோடு இருப்பதே நன்மையானது. உதாரணமாக 'பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு' எனக்கூறுவர். மாறாக பொறாமைக்கும் ஓர் எல்லையுண்டு என சாதாரணமாக எவரும் கூறுவதில்லை. ஆனால் பொறாமையும் பிள்ளைகளுக்கு ஒரு சிறிய எல்லைவரை இருப்பதில் தவறில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.



வகுப்பில் கற்றல் செயற்பாடுகளில் அதிக ஈடுபாடு காட்டி, பரீட்சைகளில் உயர்வான புள்ளிகளைப் பெறும் மாணவன் மீது ஏனைய மாணவர்களுக்கு பொறாமை ஏற்படுவதுண்டு. இதனால் அவனது முன்னேற்றத்தைத் தடைசெய்ய அவனுடைய பயிற்சிக் கொப்பியைத் திருடிவிடுகின்றனர். தாங்கள் திறமையற்றிருப்பதுபோல அவனும் திறமையற்றிருக்க வேண்டுமென்பது இவர்களது எண்ணமாகும். இது மிகுந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீங்கு பயக்கவல்ல பொறாமையாகும். மாறாக குறித்த மாணவனது முன்னேற்றம் மற்றும் முயற்சிகளைப்பார்த்து பொறாமைப்படுவதன் மூலம் போட்டி மனப்பான்மை ஏற்பட்டு, தாங்களும் நன்றாகக் கற்று, அந்த மாணவனை விடவும் அதிக புள்ளிகளைப் பெறவேண்டுமென எண்ணுவதும், அதன்படி செயற்பட ஆரம்பிப்பதும் ஆரோக்கி யமானதொரு பொறாமையாகக் கருத முடியும்.

இவ்வாறே நண்பர்களுடன் சேர்ந்து குளத்தில் அல்லது கடலில் நீராடச்செல்ல ஒரு பிள்ளைக்குப் பயம் ஏற்படுவது நியாயமானது. ஏனெனில் தனக்கு நீச்சல் தெரியாது என்பதை அவர் அறிவார். அவ்வாறின்றி நீராடச்சென்று தனது உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டியும் ஏற்படலாம். மேலும் நன்றாக நீந்தத் தெரிந்த ஒருவரைப் பார்த்து பொறாமைப்படுவதும் உண்டு. மாறாக இப்பயத்திலிருந்தும் பொறாமையிலிருந்தும் விடுபட தான் நீச்சல் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற தூண்டலும் அவரிடம் ஏற்படலாம். எனவே பொறாமை நலன் பயப்பதாகவோ தீங்கு பயப்பதாகவோ இருக்கலாம். இது அவரவர் நிலைமைக்கேற்ப வேறுபடும்.

***வினா 02:*** *யார் யாருக்கெல்லாம் பொறாமை ஏற்படலாம்? அதன் வடிவங்கள் எவ்வாறு காணப்படும்?*

**பதில்:** பொறாமை பொதுவாக யாருக்கும் எவர்மீதும் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்படலாம்.

உதாரணமாக,

1. மாணவனுக்கு – மாணவன் மீது ஏற்படலாம்
2. நண்பனுக்கு – நண்பன் மீது ஏற்படலாம்
3. தந்தைக்கு – மகன் மீது ஏற்படலாம்
4. மகனுக்கு – தந்தை மீது ஏற்படலாம்
5. மனைவிக்கு – கணவன் மீது ஏற்படலாம்
6. கணவனுக்கு – மனைவி மீது ஏற்படலாம்

என பலவிதங்களில் ஏற்பட வாய்ப்புண்டு

இங்கு மகனுக்கு தந்தை மீது ஏற்பட்ட பொறாமையைப் பார்ப்போம்.

இரவி முதலாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். அவன் எல்லோருடனும் பழகுவதில்லை. வகுப்பில் ஒதுங்கியே இருப்பான். ஏனைய பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடுவதில்லை. ஒரு மூலையில் அமர்ந்து நகத்தையோ, பென்சிலையோ கடித்துக்கொண்டிருப்பான். அவன், தனது பிறந்த ஆறு மாதமேயான தங்கையின் கழுத்தை நெரிக்க முயற்சித்ததை ஆசிரியரிடம் இரவியின் அம்மா கூறியிருந்தார். ஆசிரியர் கொஞ்சம் கொஞ்சமாக இரவியின் நம்பிக்கையைப் பெற்றார். ஒருநாள் ஏனைய குழந்தைகளெல்லாம் வெளியில் விளையாடிக்கொண்டிருக்கும் போது, இரவியும் ஆசிரியரும் மட்டுமே வகுப்பில் இருந்தனர். அவன் தரையில் கிடந்த நூலைக் கண்டெடுத்தான். அதனை ஒரு கையில் உயரமாகப் பிடித்து ஒரு திருப்தியான பார்வையுடன் ஆசிரியரைக் கேட்டான். 'இந்த நூலின் அளவிற்கு நீங்கள் வளர்ந்து விட்டீர்களா?' 'பார்ப்போம் வளர்ந்து விட்டேன் என்று தான் நினைக்கிறேன்.... இந்த நூலை வைத்து நீ என்ன செய்யப்போகிறாய்?' 'ஒன்றுமில்லை. நான் இந்த நூல் அளவிற்கு வளர்ந்த பிறகு என் அப்பாவைக் கொல்வேன்' 'உன் அப்பாவை உனக்குப் பிடிக்காதா?' 'பிடிக்கவே பிடிக்காது; அவர்மேல் எனக்கு வெறுப்பு'.

'அப்பா மேல உனக்கு அதிக கோபம் அப்படித்தானே?' 'ஆம், எனக்கு அவரைப் பிடிக்கல. அவருக்கு எனது தங்கச்சி வவா மேலதான் பாசம். அவளையும் எனக்கு கொல்லனும்'.

இதுதான் சம்பவம்:

இரவி அவன் தங்கையையும் தந்தையையும் வெறுத்தான். ஏனெனில், தந்தை தங்கையைத் தான் அன்பு செய்வதாக நினைத்தான். அவன் தந்தையும் தன் இளைய பெண் குழந்தையையே அடிக்கடி மடியில் போட்டு கொஞ்சுவதுண்டு. இரவியிடம் "பாரடா எவ்வளவு அழகாக இருக்கா என் இராசாத்தி" எனக் கூறுவாராம். இரவியை இப்போதெல்லாம் அவர் முந்தைய அளவுக்கு கொஞ்சுவதில்லை. அது சிறு பிள்ளையான இரவியின் மனதைப் பாதிக்கத்தான் செய்யும்.

சி.பி வறகி என்பவர் குழந்தை வளர்ப்பு பற்றிய தன் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள விடயமே இது. இரவியைப்போல அழுத்தமான உணர்ச்சிகளால் எல்லாக் குழந்தைகளும் பாதிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படுவதில்லை. என்றாலும் சாதாரணமாக வரும் நோய் போல எல்லாக் குழந்தைகளுக்கும் வரும் மனவெழுச்சிசார் அனுபவம் பொறாமையாகும்.


உண்மையில் சொல்லப்போனால் குடும்பங் களில், வேலைத்தலங்களில், பாடசாலைகளில் பொறாமை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இதற்குக் காரணம் எல்லா நேரமும் எல் லோருக்கும் ஒரே அளவு முக்கியத்துவம் கொடுக்க முடியாதிருப்பதாகும். எனவே பொறாமை பற்றிய விழிப்புணர்வைப் பொறுத்தும் அதனைக் கையாளும் திறனைப் பெற்றுக்கொள் வதும் முடிந்த அளவுக்கு பொறாமையைத் தூண்டாத சூழ்நிலைகளையும். உறவுகளையும் உருவாக்கிக்கொள்வது முக்கியமானது.

**வினா *03:*** பிள்ளைகளிடம் ஏற்படும் பொறாமைக்கு உளவியல் காரணங்கள் ஏதும் உண்டா?

இக்கேள்விக்கும் இன்னும் சில கேள்வி களுக்குமான பதில்கள் தொடரும் இதழில் இடம்பெறும்.



### ஹிங்குரான கல்வாரித் திருத்தலத்தில் சிலுவைப்பாதை

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஹிங்குரான கல்வாரித்திருத்தலத்தில் சிலுவைப்பாதை தியானமானது 07.03.2026 அன்று. கல்முனை மறைக்கோட்ட குருக்களின் ஒழுங்கமைப்பில் அம்பாறை புனித இஞ்ஞாசியார் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை றொசான் திசேரா அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இவ் சிலுவைப்பாதை தியானத்தில் மட்டக்களப்பு மறைமாவட்டத்திலிருந்து வருகை தந்திருந்த இறை மக்கள் பக்தியோடு கலந்து கொண்டிருந்தனர்.

### தாண்டியடி சிலுவைமலையில் சிலுவைப்பாதை

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் தாண்டியடி சிலுவைமலையில் சிலுவைப்பாதை தியானமானது 21.03.2026 அன்று திருக்கோவில் புனித சூசையப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை பிலிப் றஞ்சனகுமார் அடிகளார் அவர்களின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்றது. இவ் சிலுவைப்பாதை தியானத்தில் மட்டக்களப்பு மறைமாவட்டத்திலிருந்து வருகை தந்திருந்த இறை மக்கள் பக்தியோடு கலந்து கொண்டிருந்தனர்.

### மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத்தொடர்பு நிலையத்தின் ஏற்பாட்டில் குடும்பங்களுக்கான கருத்தரங்கு

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையுடன் மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகதொடர்புநிலையத்தின் ஏற்பாட்டில், 22.02.2026 அன்று மட்டக்களப்பு மறைக்கோட்ட பங்குகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கான கருத்தரங்கு. இருதயபுரம் திரு இருதயநாதர் மண்டபத்தில் நடைபெற்றது. இக் கருத்தரங்கு 'தொடர்பு சாதனங்களினால் ஏற்படும் நன்மைதீமைகள்' என்ற தலைப்பில் இடம்பெற்றது, வளவாளராக திரு பியோ நவநீதன் அவர்கள் வழிநடத்தினார். இந்நிகழ்வில் மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத்தொடர்புநிலைய இயக்குனர் C.V அன்னதாஸ் அடிகளாரும், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகஸ்தரான திருமதி டெஸ்சி கெர்க்ஷோன் அவர்களும் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பைந்தமிழ்க்குமரன் ஜெ.டேவிட்

# என் குமரன்

சிறுகதை

இலங்கையின் எழில் கொஞ்சும் மலையக நகரான கண்டியில் பனிமூட்டம் விலகாத அந்த அதிகாலை 6.15ற்கு மீனு பிறந்தாள். திகதி 1999 மார்ச் 06. நிறை 950 கிராம். இடது புற காதின் கீழாக கருநிற மச்சம். கதை பேசும் கண்கள். குழி விழும் கன்னங்கள். இதற்கு மேல் வர்ணித்தால் என் வீட்டு தணிக்கைக் குழுவின் கத்தரி அனுமதிக்காதென்பதால் ஒற்றை வரியில் திரையில் தோன்றும் நயன்தாராவைவிட ஒரு படி தூக்கலான அழகி. மலையகத்து குளிர் தந்த பூரிப்பும் அம்மா மெற்றில்டாவின் அதீத கவனிப்பும் அவளை அழகியாக வடித்து விட்டிருந்தன என்பதே உண்மை. முத்துக்கள் சிதறும் சிரிப்பில் மயங்காத இளசுகள் இல்லவே இல்லை என்று கூறலாம். கடந்த வாரம்தான் இருபத்துமூன்றாவது பிறந்த நாளை அப்பா ஜூலியன், அம்மா மெற்றில்டா தம்பி தங்கக் கம்பி டெனியுடன் வீட்டிலே கேக் கட் பண்ணி ஹேப்பி வேத்டே பாடி ஷெல்போணில் படமெடுத்து மெழுகுவர்த்திகளுடன் பெரியம்மா வேளாங்கன்னியிடம் எதிர்காலத்திற்காக அப்பிளிக்கேசன் கொடுத்து கொண்டாடினாள். மதியம் ஸ்பெசல் ஐஸ்கிறீம் நைட் சிக்கன் கொத்து இப்படியாக பொழுது கழிந்து விட்டிருந்தது.

ரீ எக்ஸ்போட் கம்பனியொன்றில் கடந்த ஒன்றரை வருடங்களாக குவாலிட்டி மனேஜராக பணியாற்றுகின்றாள். மாலை நான்கு முப்பதிற்கு வேலை முடிந்ததும் தனது நீலமும் வெண்மையும் கலந்த ஸ்கூட்டியில் பயணித்து வீடு வருவாள். அந்த இரண்டு கிலோ மீற்றர் தூரமும் அவளது தரிசனம் கிடைக்காதா என்று காத்துக் கிடக்கும் இளவட்டங்களை அலட்சியம் செய்து கடைக்கண்ணால் ரசித்தபடி இன்றும் வீடு வந்தாள். ஹைகீல்ஸ்சை வேகமாக கழற்றியபடியே புத்தம் புதிய பிராண்டட் ஹேண்ட்வேக்கை சோபாவினுள் வீசியவள்,

"அம்மா...அம்மா..." என்று கத்தினாள்.

"என்னடி... இந்தா... வாறன்" இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் குரல்.
"என்ன...மகள்" என்றபடியே அப்பாவும் வெளியே வந்தார்.
"அப்பா... நான்... ஆரு...? அப்பா விழித்தார்.
அம்மா "இதென்னடி கேள்வி..." என்றாள்.
"அப்பா... நீங்க சொல்லுங்கப்பா... நான் ஆரு..."
"நாங்க பெத்த ஒரே மகள்" என்றார்.
"போதும் என்ன எப்பிடி வளத்தீங்க..."
"எந்தக் குறையும் வெக்காம வளத்திருக்கிறம்"
"நல்ல ஒழுக்கமா மரியாதையா வளத்திருக்கிறீங்கதானே......"
"அதில என்ன சந்தேகம்...."
"இந்தா இந்த லெட்டர வாசிச்சிப் பாருங்க...." நீட்டினாள். அது தபாலில் வந்திருக்கவில்லை போலும். அதை விரித்தார். ஒரு சிவப்பநிற றோசாப்பூ அதற்குள்ளிருந்து கீழே விழுந்தது.
"என்ன லெட்டர் இது...."
"லவ் லெட்டர்.... சத்தமா வாசியுங்கப்பா... மிச்சத்தப் பிறகு சொல்லுறன்"
"என் உயிரே மீனு,
நான் உன்னை உயிருக்குயிராக கதலிப்பதும் அதை சொல்ல முடியாமல் தவிப்பதுமாய் ஆறு மாதங்கள் ஓடி விட்டன...
........
"நல்லா பாருங்கப்பா.... காவன்னா இல்ல க..னா... கதலிப்பதும்..ம்..ம்..மேல வாசியுங்க" என்றபடி கை தட்டிச் சிரித்தாள்.
......
கண் மூடினால் உன் உருவம். கண் திறந்தால் உன் முகம். நான் நானாக இல்லை. ஐ லவ் யூ...மீனு
இப்படிக்கு
எம்.குமரன்.
நிமிர்ந்தார் ஜூலியன். "ஆரு மகள் இது...."
"நம்மட இந்த லேன் போய் மெயின்ல ஏறுதே முதலாவதாக வாற போண் கடையில மூணுநாலு தறுதலைகள் நிக்குமே.... அதில...."

"ஆ.... உயரமா கறுப்பு சண்கிளாஸ் போட்டிட்டு... கீரிப்புள்ளட முடி மாதிரி தலமுடி வெட்டுமா...."
"சீச்சீ.... அவனில்லப்பா.. மற்றவன். இந்த லப்பர் பந்து படத்தில மெயினா நடிக்கிறானே ஒரு பரட்டத் தலையன் அவண்ட ஷேப்பில நடுத்தர உயரமா......."
"ஆ.... தெரியுமக்கா... ஒரு நாள் அந்த அண்ணன் என்னயக் கூப்புட்டு உன்ர மொபைல் நம்பர் கேட்டக்கா.... ஐஸ்கிறீம் சாப்பிடக் கூப்பிட்டக்கா.... நான் போகல்ல..." என்றான் தம்பி.
"ம்ம்... ம்... என்ன செய்யலாம்...." அப்பா கோபம் கலந்த சிந்தனையில் ஆழ்ந்தார்.
"காலி....காலி... காவாலிகள்... ஒரு பொம்புளப்புள்ள வெளிக்கிட்டு போய்வர வழியில்ல.... இஞ்சேப்பா... பியதாச ஓஜசி உங்களுக்கு நல்ல பழக்கம்தானே. போய் ஒரு என்றியப் போட்டு அவனப்புடிச்சி நாலு சாத்துச் சாத்தி விடுங்களனப்பா. நம்மட பிள்ளையிர பக்கம் திரும்பியும் பாக்க மாட்டான்..." என்கிறாள் தாய் மெற்றில்டா.
"நானும் வாறனப்பா..." இது சின்னவன் டெனி.
"வேணாம்... வேணாம்... தம்பி. சைக்கிள எடுத்திற்று போண் கடைக்குப் போய் அப்பா சொன்னவரு எண்டு கையோட அவனக் கூட்டிற்று வா. வேற ஒருகதையும் கதைக்க வேணாம் என்ன..." என்றார்.
"சரிப்பா இந்தா போறன்...." அவன் பறந்து போனான்.
"நீ போ மகள். அவன் வரட்டும் நான் பாத்துக்கொள்றன்...."
"சரிப்பா..." என்றபடி அவள் தன் அறைக்குள் சென்று மறைகிறாள்.
"இருபத்தேழு வரிசமா விதானை வேலை. இவனப்போல எத்தின காவாலிகள பாத்தவன் நான். எனக்கிட்டயாடா... வாடா... வா...." ஜூலியன் உறுமுகிறார்.
"என்ர பிள்ள குனிஞ்ச தல நிமிராதவள். பண்பாடா ஒழுக்கமா வளத்திருக்கிறன். நல்ல கெட்டிக்காரி. இந்த காதல் கீதலெல்லாம் அவளுக்கு சரிப்பட்டு வராது... ஓம்....." அம்மாவின் குரல் வீடெங்கும் எதிரொலிக்கிறது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாசலில் மீண்டும் சைக்கிள் சத்தம்.

"அண்ணன் உள்ளுக்க வாங்க. அம்மாவும் அப்பாவும் உங்களுக்காகத்தான் வெயிற்றிங்..." என்றபடி தம்பி முன்னால் வருகிறான். மழையில் நனைந்த கோழி போல பயந்த முகத்துடன் அடிமேல் அடி வைத்து அவன் வருகிறான். ஊர்விட்டு ஊர்வந்து; தொழிலில்லாமல் போண் கடையில் ஒட்டிக்கொண்டு காலத்தைக் கடத்தும் ஒரு பாவப்பட்ட பிறவி. இருபத்தேழு வயது. கட்டாயமாக சமபோஸ சாப்பிட்டால்தான் கொஞ்சமேனும் சதை பிடிப்பை காணலாம் எனும் உடற்கட்டு.

"நீதான்... எம்.குமரனா...?"

"ஓ... ஓ... ஓமையா...."

"எந்த ஊருடா...."

"ந... நான்... படுவாங்கரைப் பக்கமா...."

"படிச்சிரிக்கையா? அம்மா... அப்பா... சொந்தபந்தம் ...ஏதும்....." தலையை அசைக்கிறான்.

"மடையா... மடையா ... லூசாடா நீ... நான் ஆரு தெரியுமாடா... என்ர செல்வாக்கு என்னண்டு தெரியுமாடா... ஒரு கம்ளெயிண்ட் குடுத்தாப் போதும் கம்பிக்கூட்டுக்குள்ள கிடப்பா. ஆளப்பாரு மாங்காய்க்கெறிஞ்ச பொல்லுப்போல... அதுக்குள்ள காதல் கத்திரிக்காய்... உன்ர போண் கட முதலாளியிட்ட ஒரு சத்தம் சொன்னாப் போதும். உன்ன அடிச்சி துரத்திப் போடுவான். இந்தா இப்பவே...."

"அ... அ... ஐயா... ஐயா.... வேணாமைய்யா.... தொழிலும் இல்லாம படுக்க இடம்கூட இல்லாம .... செத்துப் போவனய்யா..ம்..ம்.. மன்னிச்சுக்குங்கய்யா... இனிமேல... இப்பிடி...." வார்த்தைகள் திக்கித்திணறி தொண்டையில் அடைத்துக் கொள்ள பயந்து நடுங்கியபடி தவிக்கிறான் அவன். அந்தப் பயம் அவரை உசுப்பேத்தி விட்டிருக்கும் போல.. சடாரென்று எழும்பி கதவு மூலையிலிருந்த வார்த்தடிய கையில எடுக்கவும்,

"ஐயோ இதென்னப்பா நீங்க.... விடுங்கோ...." என்றபடி பாய்ந்து அதைப் பறிக்கிறாள் மனைவி.

"நானெப்பிடி என்ர புள்ளய ஒழுக்கமா வளத்திருக்கிறன் தெரியுமாடா...? நான் கிழிச்ச கோட்ட தாண்ட மாட்டாள் என்ர பிள்ள...."

"ஐயா... ஐயா... என்ன மன்னியுங்கய்யா..." அவன் குனிந்து அவரின் கால்களைத் தொட பின்னால் விலகியபடி,

"அடே மடையா ஏன்ரா என்ர மகளுக்கு லவ் லெட்ரர் எழுதினனீ..."

"முளிசிறான் பாருங்க காவாலி..."

"பொறு... பொறு..மெற்றில்டா..."

"...பாவப்பட்டு... இரக்கப்பட்டு....முதலும் கடைசியுமா... உன்ன மன்னிச்சி விர்ரன். இனிமேல என்ர மகள் நடந்துபோற தெருவிலகூட நீ நடமாடக்கூடாது. மிச்சம் கவனம் விளங்குதா... இல்ல ..."

"வேணாம் ஐயா... என்ன மன்னிச்சிருங்க... நா.. நான்...போறன்..."

"வீ... கெயாபுல் ...யூ ..மே.. கோ..நௌ.."

அவன் தட்டுத்தடுமாறி செருப்பைக் கொழுவிக் கொண்டு ஓடாத குறையாக ஓடி மறைகிறான். மாடியில் நின்றபடி எல்லாவற்றையும் ரசித்துக்கொண்டிருந்த மீனு,

"அப்பா சும்மா சொல்லக்கூடாது என்னமா சிக்சர் அடிக்கிறீங்க..." என்றாள்.

"இனிமேல அவன் அக்கா பக்கம் தல வெச்சிக்கூட படுக்க மாட்டான் என்னக்கா..." என்கிறான் தம்பி.

"இனிமேல மீனுவ வேலைக்கு அனுப்பாம நிப்பாட்டியுடுவமப்பா" இது அம்மா.

"நோ.. நோ.. அவள் என்ர மகள். நான் ஒழுக்கமா வளத்திருக்கிறன். அதோட துணிச்சல்காரி..."

"வெரிகுட் அப்பா... நான் அப்பா பிள்ள...." இது மீனுவின் குரல்.

"என்ன புத்தகம் மகள் கையில..."

"இது திருக்குறள் புத்தகமப்பா... பரிமேலழகர் உரை..."

"எப்புடி என்ர மகள். மத்ததுகள் எண்டா கதப்புத்தகமும் கையுமா திரியுங்கள். என்ர மகள் திருக்குறள், வாக்குண்டாம், நல்வழி, கொன்றை வேந்தன் வாசிக்கிறாள்..." இது அம்மாவின் பெருமிதம். உரையாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பெருமையோடு தொடர மீனு திருக்குறளை விரித்தாள். உள்ளேயிருந்த கடிதத்தை எடுத்து ஏழாவது தடவையாக படித்தாள்.

"செல்லம்....செல்லம் ... மீனுக்குட்டி... சனிக்கிழமை பேராதனைப் பூங்காவில் வழமையான இடத்தில் சந்திப்போம்.

ஆயிரம் முத்தங்களுடன்...
என். குமரன்."

ஆசையுடன் படித்தவள் அவசரமாக மடித்து சொருகிக் கொண்டாள். ஆனால் அப்பாவிடம் காட்டவில்லை. ஏன் தெரியுமா? இது என் குமரன்.

## சமையல் இரகசியங்கள்




சாம்பார் செய்த பிறகு இறுதியாக அதில் 1 டேபிள் ஸ்பூன் தேங்காய் எண்ணெய், பச்சை கருவேப்பிலை ஒரு கொத்து போட்டு, அப்படியே மூடி வைத்து 5 நிமிடம் கழித்து திறந்தால், சாம்பாரின் வாசம் சூப்பராக இருக்கும்.



காரல் இருக்கும் கிழங்கு வகைகளை, வேக வைக்கும் போது கொய்யா இலைகளை அந்த நீரில் சேர்த்தால், சமைத்த பிறகு, தொண்டைக்கும் கைக்கும் எந்த அரிப்பும் ஏற்படாது.

# பார்வைகள் பலவிதம்!

37



- ஹென்றி

உலகில் வெற்றி பெற்றவர்கள் எப்படி மற்றவர்களைவிட வேறுபடுகிறார்கள்? அவர்கள் பார்வையில் படும் அனைத்தும் நம் பார்வையிலும் படுகிறது. ஆனால், நம்மைவிட பலவிதங்களில் அவர்கள் சிறப்பு பெறுகின்றனரே.. அதெப்படி?

அவர்கள் நாம் பார்க்காத கோணத்தில் பார்ப்பதே அந்த வித்தியாசத்திற்குக் காரணம். விடா முயற்சியும்,கடும் உழைப்பும் அவர்கள் வெற்றிக்கு வழி வகுத்திருப்பதையும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். இயந்திரம் போன்ற வாழ்க்கையை நாம் வாழ்கிறோம். "துயில் நீங்கி எழுந்தவுடன் "மதியம் இது, மாலையில் இது, இரவில் இது" என குறிப்பிட்ட செயல்களையே நாம் தொடர்ந்து செய்கிறோம். நாம் வழக்கமாக செய்யும் அதே செயல்களை தினம் தினம் செய்து கொண்டு வெற்றி வந்து விடும் என எதிர்பார்க்க முடியுமா?

"தெளிவான சிந்தனையில் எழும் மாற்றங்களை தினசரி வாழ்க்கையில் கடைப்பிடிக்கும்போதே நம் வாழ்வில் முன்னேற்றம் நுழைகிறது." என்பதனை தெரிந்து வைத்து அதன்படி செயற்பட்டதனால் அவர்கள் நம்மைவிட சிறந்தவர்களாக திகழ்கிறார்கள். ஆனால், நம்மில் பலர் வேறு கோணங்களில் மாற்றி யோசிக்கும் நிலைக்கு நம்மைத் தயார் செய்து கொள்வதில்லை. எப்போதும் போலவே ஒரு சராசரி மனிதனாக இருப்பதே பாதுகாப்பானது என எண்ணுகிறோம். இந்தச் சிந்தனையில் இருந்து வேறுபடுவதனால் ஒரு சிலர் மற்றவர்களைக் காட்டிலும் உயரத்தில் திகழ்கின்றனர். மீதியானோர் வாழ்நாள் முழுவதும் அதே நிலையில் அப்படியே இருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்தந்தை

# யோசப் இக்னேசியஸ் சந்திரா

(1956-2026)

**பிறப்பும், இளமையும்:**

அருட்பணி யோசப் இக்னேஷியஸ் சந்திரா அடிகளார் 19.05.1956இல் மட்டக்களப்பு நகரின் மையமாகிய புளியந்தீவில் எனுமிடத்தில் பிறந்தார். புளியந்தீவு புனித மரியாள் பேராலயப் பங்கில் திருமுழுக்குப் பெற்று அங்கேயே தனது சிறுபராயம் முதல் வளர்ந்து வந்தார். இவரது தந்தையார் மறைந்த இக்னேஷியஸ் யோசப் தாயார் யோசப் செபமலர் ஆவர். அருட்தந்தையவர்கள் மூன்று பெண் சகோதரிகள் மற்றும் இரண்டு ஆண் சகோதரர்களுடன் கூடவே பிறந்தவர். அவரது ஒரு ஆண் சகோதரர் ஏற்கனவே இறந்து விட்டார். தனது ஆரம்பிக் கல்வி முதல் உயர்நிலைக் கல்வி வரை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் பெற்றுக்கொண்டார். பாடசாலைக் கல்வியினைப் பூர்த்திசெய்த பிற்பாடு சில ஆண்டுகள் கிறிஸ்தவ வாழ்வுச் சமூகம், இளையோர் ஆணைக்குழு போன்ற பல அமைப்புக்களில் இணைந்து செயற்பட்டார். பின்னர் குருவாக வருகின்ற விருப்பத்தில் 1984ஆம் ஆண்டில் அன்றைய திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இணைந்து கொண்டார்.

**குருத்துவ அழைப்பும், உருவாக்கமும்:**

குருத்துவ அழைத்தலுக்கான அழைப்பினைப் பெற்று யாழ்ப்பாணம் புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இணைந்து முதலில் புகுமுக மெய்யயியல் கற்கையினைப் பூர்த்திசெய்து அதன்பிற்பாடு மெய்யியல் கற்கையினையும் 1984 – 1987ஆம் ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியில் பூர்த்தி செய்தார். அதன் பின்னர் தனது இறையியல் கற்கையினைத் தொடர்வதற்காக அதே குருத்துவக் கல்லூரியில் இணைந்து கொண்டார். 1988ஆம் ஆண்டில் இறையியல் கற்கையினை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தாலும் 1990இல் ஏற்பட்ட பாரிய உள்நாட்டுப் போரின் காரணமாக அங்கிருந்து விலகி கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் இணைந்து 1992ஆம் ஆண்டில் இறையியல் கற்கை நெறியினை பூர்த்தி செய்தார். இறையியல் கற்கையின் நிறைவில் 21.09.1992இல் அன்றைய திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஆயர் பேரருட்திரு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையினால் திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்திற்கான குருவாகத் திருப்பொழிவு செய்யப்பட்டார்.

**குருத்துவமும் பணிவாழ்வும்:**

குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட அருட்தந்தையவர்கள் இணைந்த திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் தனது பணியினை பல்வேறு பங்குகளில் நிறைவேற்றினார். அந்த வகையில் திருகோணமலை மரியாள் பேராலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாகவும், புனித அந்தோனியார் ஆலயம், மூதூர், சதா சகாய அன்னை திருத்தலம், ஆயித்தமலை, புனித திருமுழுக்கு யோவான் ஆலயம், தாழங்குடா, ஆரோக்கிய அன்னை ஆலயம், அக்கரைப்பற்று ஆகியவற்றின் பங்குத்தந்தையாகவும், செங்கலடிப் பங்கின் இணைப் பங்குத்தந்தையாகக் கடமையாற்றி திருத்தூதர்களான பேதுரு, பவுல் ஆலயம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வந்தாறுமூலை மற்றும் புனித அந்தோனியார் ஆலயம், களுவன்கேணி ஆகியவற்றிலும் கடமையாற்றினார். 2008ஆம் ஆண்டு முதல் மட்டக்களப்பு ஆயரில்லத்தில் தங்கியிருந்து ஆன்மீகக் கடமைகளில் ஈடுபட்டு வந்தார்.

தனது பணிவாழ்வில் இருமுறை பலத்த காயங்களுடன் உயிர் தப்பியவர், முதற்தடவையாக, 1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூதூர்ப் பங்கில் பணியாற்றுகின்றபோது இருதயபுர ஆலயத் திருவிழாவின்போது தனிநபர் தாக்குதலுக்குள்ளாகி கொலை முயற்சியிலிருந்து பலத்த காயங்களுடன் தப்பியவர். அதன் பிற்பாடு 2000ஆம் ஆண்டில் ஆயித்தியமலை சதா சகாய அன்னை திருத் தலத்தில் பங்குத்தந்தையாக கடமையாற்றிய காலத்தில், அங்குள்ள பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வெசாக் பௌணர்மி தினத்தில் இன்பச் சுற்றுலாவிற்காக மட்டக்களப்பு நகருக்கு வந்து வெசாக் தோரணங்களை பார்வையிட முயன்ற வேளையில், நகரில் வெடித்த குண்டு வெடிப்பில் சிக்கி அவர் அழைத்துவந்த பிள்ளைகளில் பத்துப்பேர் அந்த இடத்திலேயே மரணித்துப்போக, இன்னும் சிலர் பலத்த காயமுற்றனர். அவர்களுள் அருட்தந்தையும் ஒருவராவர். அன்று முதல் இறக்கும் வரையிலும் அவரது தன்னிச்சையாக இயங்கும் செயற்பாடுகள் முடக்கப்பட்டன. ஆயினும் மனந்தளர்ந்து போகாது, தனக்கும் தனது பங்குச் சிறார்களுக்கும் ஏற்பட்ட அனர்த்தத்திலிருந்து வெளிவந்து தனது குருத்துவப் பணியினை மறைமாவட்டத்தில் தொடர்ந்தார். இதற்கு தக்கவாறு தன்னை ஆயத்தம் செய்துகொள்ளும் நோக்கில் இந்தியாவின் கேரளா சாலக்குடியில் அமைந்துள்ள டிவைன் தியான இல்லத்தில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் தங்கியிருந்து ஆன்மிக வலிமைபெற்று நாட்டிற்கு திரும்பினார். தனது உடல் இயலாமையிலும், இக்கட்டான காலகட்டத்தில் பல்வேறு பட்ட இன்னல்களுக்கு மத்தியிலும் மக்களுக்கான தனது பணியில் தம்மையே முழுமையாக அர்ப்பணித்துச் செயற் பட்டார்.

அருட்தந்தை சந்திரா அடிகளார் இயல்பாகவே மிகுந்த இரக்கம் கொண்ட உள்ளம் படைத்தவர். தேவையென்று வருவோருக்கு இல்லையென்று சொல்லாது தன்னாலான அனைத்து உதவிகளையும் புரிவார். அவர் செல்கின்ற இடங்களிலெல்லாம் பிள்ளைகளின் கல்வியில் அதிக நாட்டம் கொண்டு வறிய மாணவர்களுக்கு உதவி புரிவதிலும், அவர்கள் கல்வியில் முன்னேற பாலமாகச் செயற்பட்டார். குருமடத்தில் கற்கின்ற காலத்திலிருந்து விருந்தோம்பலுக்கு பேர்போனவர். தனது உபசரிப்பினாலும், கனிவான வரவேற்பினாலும் அனைவரையும் அரவணைத்துக் கொள்வார்.







**வாழ்வின் இறுதிக்காலம்:**

2012ஆம் ஆண்டில் மட்டக்களப்பு புதிய மறை மாவட்டமாக உருவாகியபோது மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் இணைந்துகொண்டு பணியாற்றினார். 2008ஆம் ஆண்டு முதல் தனது குருத்துவ பணிவாழ்விலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டு ஆயரில்லத்தில் தனது ஓய்வுக் காலத்தை இறக்கும் வரையிலும் கழித்தார். இக்காலகட்டங்களில் தனது இயலாமையிலும், தன்னிச்சையான செயற்பாடுகளினால் பல பங்குகளுக்கும், வேறு இடங்களுக்கும் சென்று ஆவியின் அருங்கொடை வழிபாடுகளையும், இல்லங்களில் குணமாக்கல் வழிபாடுகளையும் நடாத்தினார். கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக கடும் சுகவீனமுற்றிருந்த அருட்தந்தையவர்கள் 01.03.2026இல் இவ்வுலக வாழ்விலிருந்து விடைபெற்றுக் கொண்டார்.

இறந்த அருட்தந்தையவர்கள் குருவாக 33 ஆண்டுகளுக்கு மேலாக மட்டக்களப்பு, திருகோணமலை மறைமாவட்டங்களில் பணியாற்றியுள்ளார்.

அருட்பணி **நவாஜி**

*திருகோணமலை மறைமாவட்டம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வினாவிடைப் போட்டி இலக்கம் - 63

போட்டிக்கான பரிசுகள் அனுசரணை: திரு. லெஸ்லிராஜ் : ஜே.ஜே. சுப்பர் மார்க்கட்
மெயின் வீதி, தன்னாமுனை. 0779780151

**முதலில் வரும் ஐந்து வினாக்களும் லேவியர் 01–12 வரையான அதிகாரங்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன.**

1) ஆண்டவர் மோசேயை அழைத்து இஸ்ரயேல் மக்களிடம் எந்த எந்த பலிகளுக்கு நேர்ச்சை செலுத்த வேண்டிய சட்டத்தினைக் பற்றி குறிப்பிடுகின்றார்? ..........................................................................

..........................................................................

2) மோசே திருப்பொழிவு செய்து புனிதப்தடுத்துவதற்கு முன்பு ஆரோனையும் அவர் புதல்வரையும் வரவழைத்து என்ன செய்தார்? ..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

3) ஆண்டவரிடமிருந்து நெருப்பு விரைந்தெழுந்து வந்து நாதாபையும், அபிகூவையும் விழுங்கியதற்கான காரணம் என்ன? ..........................................................................

..........................................................................

4) ஒரு பெண் கருத்தரித்து ஆண் குழந்தையை பெற்றெடுத்த பின், அவள் தூய்மையடைவதற்கு ஆண்டவர் கொடுத்த சட்டங்கள் எவை? ..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

5) லேவியர் நூலில் இடம்பெற்றிருக்கின்ற விடயங்கள் எவை? ..........................................................................

..........................................................................

..........................................................................

6) பயன்தரு பாடசாலைப்பற்றிய சிந்தனைகளை முன் வைத்தவர் யார்? அவர் தனது பாடசாலை தொடர்பான இணைவுக்குணகத்தில் முதலில் வலியுறுத்துவது என்ன? ..........................................................................

..........................................................................

7) கடந்த 2025ம்ஆண்டு செப்டெம்பர் மாதம் 07ம் திகதியன்று இளம் புனிதராக திருநிலைப்படுத்தப் பட்டவர் யார்? அவருக்காக அர்ப்பணிக்கப்பட்ட தேவாலயம் எங்குள்ளது? ..........................................................................

..........................................................................

8) கைரேகையை வைத்து குற்றவாளிகளை கண்டுபிடிக்கம் முறையினை கண்டு பிடித்தவர் யார்?

..........................................................................

9) அருட்சகோதரி ராணி மரியாவின் வாழ்க்கை மற்றும் தியாகத்தை மையமாகக் கொண்ட திரைப்படத் தின் பெயர் என்ன? ..........................................................................

10) வியாசர் பாரதத்தைத் தழுவித் தமிழில் முதன்முதலில் வெளிவந்த வில்லி பாரதம் என்ற நூலை இயற்றியவர் யார்? ..........................................................................

பெயர் : ..........................................................................

முகவரி : ..........................................................................

..........................................................................

பங்கு : ..........................................................................

தொ.பே.இல: ..........................................................................

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 63**
**'தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**


**முடிவுத் திகதி : 15.05.2026**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# வினாவிடைப் போட்டி - 61 விடைகள்

01. ஆண்டவருக்கு பலி செலுத்த வந்துள்ளேன். உங்களையே தூய்மையாக்கிக் கொண்டு என்னுடன் பலியிட வாருங்கள். மேலும் ஈசாவையும் அவர் புதல்வரையும் தூய்மைப்படுத்தி பலியிட வருமாறு அழைத்தார்.

02. கடவுள் எனக்கு என்ன செய்யவிருக்கிறார் என்தை நான் அறியமட்டும் என் தந்தையும் தாயும் உம்மிடம் தங்கியிருக்க அனுமதி தாரும் என்று வேண்டினார்.

03. இந்த விருத்தசேதனமற்றோர் என்னைக்குத்திக் கொன்று எனக்கு அவமானத்தை வருவிக்காவண்ணம் நீ உன் வாளை உருவி என்னை குத்தி கொன்று விடு என்றார்.

04. 1. இஸ்ரயேலின் தலைவர் சாமுவேல்

2. சவுல் அரசராதல் 3. சவுல் ஆட்சியின் முற்பகுதி

4. தாவீதும் சவுலும்

5. சவுல் அவர்தம் புதல்வர்கள் ஆகியோரின் இறப்பு

05. கிபயாவிலிருந்து மலைமீது தமாரிஸ்கு மரத்தின் கீழ் சவுல் கையில் ஈட்டியை வைததுக்கொண்டு அமர்ந்திருந்தார். சவுலின் பணியாளருடன் ஏரோமியனான தோயேகு நின்றார்.

06. சாகித்திய அகாதமி விருது, பாரதிய பாஷா பரிஷத் விருது, தமிழக அரசின் பரிசு, தமிழக அரசின் சிறுகதை தொகுப்பிற்கான விருது, இலக்கிய சிந்தனை விருது

07. எருசலேம்

08. இவர் 1881ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 06ம் திகதி அன்று ஸ்கொட்லாந்து நாட்டில் பிறந்தார். பென்சிலினை கண்டு பிடித்தார்.

09. AIR INDIA 171 விமானம்

10. புனித சோபியா பேராலயம்

## ஹோர்முஸ் நீரிணை (Strait of Hormuz)

தென்கிழக்கில் ஓமான் குடாவையும், தென்மேற்கில் பாரசீகக் குடாவையும் கொண்டு அமைந்துள்ள ஒரு குறுகலான கடற் பரப்பாகும். இதன் வடக்கில் ஈரானும், தெற்கில் ஐக்கிய அரபு அமீரகமும், ஓமானின் ஒரு பகுதியான முசாந்தமும் அமைந்துள்ளன. ஹோர்முஸ் நீரிணையில் ஹோர்முஸ் தீவும் அமைந்துள்ளது. இந் நீரிணையின் மிக ஒடுங்கிய பகுதி 21 மைல்கள் அகலம் கொண்டது. இதிலே, ஒன்றிலிருந்து ஒன்று 2 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள, ஒவ்வொன்றும் ஒரு மைல் அகலம் கொண்ட, இரண்டு கால்வாய்கள் கப்பல் போக்குவரத்துக்குப் பயன்படுகின்றன. பாரசீகக் குடாவைச் சுற்றியுள்ள, பெட்ரோலிய உற்பத்தி நாடுகள், திறந்த கடற்பகுதியை அடைவதற்கான ஒரே வழி இதுவே. உலகில் பயன்படுத்தப் படும் எண்ணெயின் 20% இந் நீரிணையூடாகவே கொண்டு செல்லப் படுகின்றது. இதனால் வளைகுடா நாடுகளைப் பொறுத்தவரை இந்நீரிணை, இராணுவ முக்கியத்துவம் கொண்ட ஒன்றாகும்.

2012இல் ஈரான் அணு உலைக்கு எதிராக அந்நாடு மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளதை அடுத்து இந்த வழியே செல்லும் எண்ணெய் கப்பல்களை மறிப்போம் என்று ஈரான் அறிவித்தது. அதனைத் தொடர்ந்து இவ்வழியே ஏற்றுமதியாகும் எண்ணெய் வியாபாரத்திற்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டது.

ஈரான் எண்ணெய்க்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்திருப்பதற்கு எதிராக அரேபிய தீபகற்பத்தின் கச்சா எண்ணெய்களை உலகிற்கு எடுத்து செல்லும் முக்கிய வழியான ஹோர்முஸ் நீரிணையை மூடுவதற்கு ஈரான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 100 பேர் கையெழுத்திட்டனர். 2026 இசுரேல்-அமெரிக்கா கூட்டாக ஈரான் மீது தாக்குதல்கள் நடத்தியதற்கு மத்தியில், ஈரானின் அதியுயர் தலைவர் அலி காமெனி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, 2026 பிப்ரவரி 28 அன்று, ஈரானின் புரட்சிகரக் காவலர்கள் ஓர்முசு நீரிணை வழியாகக் கப்பல் பாதைகள் 'அனுமதிக்கப்படவில்லை" என்று அறிவித்தனர். 2026 மார்ச் 2 அன்று, இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படைகள் ஹோர்முஸ் நீரிணை மூடப்படுவதாக அதிகார பூர்வமாக அறிவித்தனர்.

- விக்கிபீடியா

### சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**முதலாம் பரிசு: 1000/=**

**S. இரத்தினேஸ்வரி,**
54/17-1 7ம் குறுக்கு,
இருதயபுரம் மேற்கு.

**இரண்டாம் பரிசு: 700/=**

**V. மாக்கிறேற்,**
இல.73, உடையார் வீதி,
கல்முனை - 02

**மூன்றாம் பரிசு: 500/=**

**M. சில்வெஸ்ரர்,**
இல. 528/8, திருமலை வீதி,
தாண்டவன்வெளி.




போட்டியில் பங்குகொண்டோர் - 12 பேர். அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி
190 முடிவுகள்

போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள் (11)
அனைவருக்கும் எமது பாராட்டுகள்....






## காரணமும் பின்னணியும்

குரு கேட்டார்:
"இரண்டு பேர் மழையில் நடந்தனர். ஒருவர் நனையவில்லை. ஏன்?"

சீடர்கள் ஆளாளுக்கு ஒவ்வொரு காரணம் சொல்லினர்.
"குடை..."
"மழை கோட்..."
"மர நிழல்.."




குரு எல்லாவற்றையும் 'தவறு' என்றார். "என் வார்த்தைகளில் கவனம் வைத்தீர்களே தவிர, உண்மையை நீங்கள் உணரத் தலைப்படவில்லை. இருவரும்தான் நனைந்தனர்."

இது ஒரு புதிர் போலத் தோன்றினாலும், புதிர் இல்லை. இவற்றை 'ஜென்கோன்கள்' என்று அழைப்பர். இவை ஏதோ ஒரு கருத்தைச் சொல்வதற்காக உருவாக்கப்படவில்லை. ஒரேவிதமாகச் சிந்திக்கப் பழகிய மனதைத் தட்டி எழுப்புவதற்காக உருவாக்கப்பட்டவை. உங்கள் தர்க்கரீதியான மனதை ஒரு வழி பண்ணுவதற்கு உருவாக்கப்பட்டவை.


எந்தக் கேள்வி கேட்கப்பட்டாலும், அதற்குக் காரண காரியங்களைக் கொண்டு பதில் தரும் மனதை அதிரடிப்பதற்காகப் பலவிதமான ஜென்கோன்களை குருமார்கள் பயன்படுத்தினர். 'கோன்' என்பது 'யோசி, யோசி' என்று யோசிக்க வைத்து, யோசனைகளே அற்றுப்போவதற்கு வழி செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டது: மனதில் காரண காரியங்கள் அற்றுப்போகும் வரை பதில் தேட வைப்பது. எந்த முடிவுக்கும் வர முடியாமல் மனம் திகைத்திருக்கும்போது, உள்ளே சடாரென்று ஒரு பிரகாசம் நிகழ வாய்ப்பு இருக்கிறது. தர்க்கரீதியான தீர்மானங்களில் இருந்து விடுவித்து, வாழ்க்கையின் உண்மையான அனுபவத்தை உங்களுக்கு வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட பல ஜென்கோன்களில் மிகப் பிரபலமான கோன்: 'ஒரு கை ஓசையைக் கேட்டிருக்கிறாயா?'


உங்கள் மனதில் சதா நிகழும் தர்க்கங்களை முற்றிலும் அழிப்பதற்காக உருவாக்கப்பட்ட கோன் கதைகளில் இதுவும் ஒன்று. தர்க்கரீதியான விளக்கங்களைத் தாண்டிப் போனால்தான் உயிர் பற்றிய தவறான தீர்மானங்களில் இருந்து விடுபட முடியும். வாழ்க்கை பற்றி அனுபவம் இன்றிச் செய்த முடிவுகளில் இருந்து வெளியே வர முடியும். ஆன்மீகத்துக்கான வாய்ப்பு அப்போதுதான் பிறக்கும்.

பழைய முடிவுகளில் இருந்து உங்களால் விலகிட, தருணத்துக்குத் தருணம் வாழ முடியுமானால், வாழ்க்கை மாபெரும் அனுபவமாக வெடித்து மலரும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹிங்குரான கல்வாரித் திருத்தலத்தில் சிலுவைப்பாதை தியானமானது 07.03.2026 அன்று நடைபெற்றது.





தாண்டியடி சிலுவைமலையில் சிலுவைப்பாதை தியானமானது 21.03.2026 அன்று நடைபெற்றது.





கிறிஸ்தவ விவகார அமைச்சின் அனுசரனையுடன் மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத்தொடர்பு நிலையத்தின் ஏற்பாட்டில் 22.02.2026 அன்று குடும்பங்களுக்கான கருத்தரங்கு இருதயபுரம் திரு இருதயநாதர் மண்டபத்தில் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media